பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kālaikathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2050 | கார்த்திகை 09 திங்கட்கிழமை 25.11.2019 | கதிர் 20

**இது ரகசியம் அல்ல!**

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடந்தால் போதும். ரெலோவுக்குள் பிரச்சினை என்றாகி விட்டது.

2010ஆம் ஆண்டுத் தேர்தலின் போதும் ரெலோவுக்குள் சிக்கல். இப்போதும் அதே கதை தான்.

பக்கம் 02 »

# சி.ஐ.டி. அதிகாரி நிசாந்த சில்வா குடும்பத்துடன் சுவிஸில் தஞ்சம்



கொழும்பு, நவ. 25

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை, 11 இளைஞர் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டமை உள்ளிட்ட நாட்டின் முக்கிய குற்றவியல் வழக்குகளின் விசாரணைகளை முன்னெடுத்த குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிசாந்த டி சில்வா, தனது குடும்பத்துடன் சுவிற்சர்லாந்துக்குப் பயணமாகியுள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தின் அனுமதி பெறாது, தனது பாதுகாப்பு நலன் கருதி அவர் வெளிநாடு சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிசாந்த டி சில்வா, தனது குடும்பத்துடன் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக நேற்றுப் பயணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

குற்றப் புலனாய்வுப் பிரிவின், ஒருங்கிணைக்கப்பட்ட

☞ 03

# விக்கி தலைமையில் மாற்றுக் கூட்டணி!

## நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு திட்டம்



யாழ்ப்பாணம், நவ. 25

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையில் மாற்று கூட்டணி ஒன்றை அமைத்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான பூர்வாங்க கலந்துரையாடல்களை வடக்கு, கிழக்கின் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த புத்திஜீவிகள் குழுவொன்று ஆரம்பித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

☞ 03

## ஹைஏஸ் வாகனம் மோதி இளைஞன் பரிதாபச் சாவு

முல்லைத்தீவு, நவ. 255

வீதியால் சைக்கிளில் பயணித்த இளைஞனை ஹைஏஸ் வாகனம் மோதித்தள்ளியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

☞ 03

## கோட்டா தீர்வு தருவாரென்று நம்பிக்கை எமக்கு இல்லை!

### கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.



கொழும்பு,நவ. 25

தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி எதனையும் பேசாத ஒருவர் ஜனாதிபதியாகியுள்ளார். ஆகவே அவர் மூலமாகத் தீர்வுகள் கிடைக்கும் என்ற

☞ 02

## தமிழரசுக் கட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவு தாயகம் எங்கும் ஒரு வார எழுச்சி நிகழ்வு

திருகோணமலை, நவ.25

தமிழரசுக் கட்சியின் எழுபதாவது ஆண்டு பூர்த்தியை ஒட்டி அடுத்த மாதத்தில் ஒரு வார காலத்துக்குத் தமிழர் தாயகம் எங்கும் எழுச்சியை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்க

☞ 03

## மஹிந்த – மைத்திரி இடையே விரைவில் முக்கிய சந்திப்பு

கொழும்பு, நவ. 25

பொதுஜன பெரமுனவும் சுதந்திரக்கட்சியும் கூட்டணியாகச் சேர்ந்து ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி

☞ 03

## தேர்தல் தந்திரோபாயங்களை வகுக்க தமிழரசு அரசியல் குழு மீண்டும் கூடும்

கொழும்பு,நவ.25

பொதுத் தேர்தல் நெருங்குவதால், தேர்தலை ஒட்டி இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னெடுக்க வேண்டிய தந்திரோபாயம் குறித்து

☞ 03

## இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்படாது

### பாதுகாப்புச் செயலர் விளக்கம்



கொழும்பு, நவ. 25

நாட்டில் இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டு ஜனநாயகம் கேள்விக்குட்படுத்த இடமளிக்கமாட்டோம் என்று பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

☞ 03

## வீதிப் பெயர்ப் பலகைகளில் தமிழை அகற்றுவோரை உடனே கைது செய்க!

### பிரதமர் மஹிந்த பொலிஸாருக்கு உத்தரவு

கொழும்பு, நவ. 25

தென்னிலங்கையில் வீதிகளின் பெயர்ப்பலகைகளில் உள்ள தமிழ்மொழியை அகற்றியவர்கள் தொடர்பில் உடன் விசாரணைகளை ஆரம்பித்து அவர்களைக் கைது செய்யுமாறு பிரதமர்

☞ 03

## 3 வீதிகளின் பெயர்ப்பலகைகளில் மீண்டும் தமிழ்மொழி இணைப்பு




கொழும்பு, நவ. 25

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தெற்கில் அகற்றப்பட்ட 3 வீதிகளின் தமிழ்மொழிமூல பெயர்பலகைகள் மீளவும் பொருத்தப்

☞ 03

## அடுத்த 20 ஆண்டுகளுக்கு ராஜபக்ஷாக்கள் ஆட்சியே!

### அடித்துக் கூறுகிறார் கம்மன்பில



கொழும்பு, நவ. 25

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பெற்ற வெற்றியின் மூலமாக அடுத்த 20 ஆண்டுகளுக்கு ராஜபக்ஷாக்

☞ 03

## கிழக்கு ஆளுநராக திஸ்ஸ விதாரண!



கொழும்பு, நவ. 25

கிழக்கு மாகாண ஆளுநராகப் பேராசிரியர் திஸ்ஸ விதாரண பதவியேற்கவுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அழைப்

☞ 03

## ரிஷாத் எம்.பி. பயணம் செய்த வாகனத்தின் மீது தாக்குதல்!

### முந்தலில் நேற்றுச் சம்பவம்



கொழும்பு, நவ. 25

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பயணித்த வாகனத்தின்

☞ 03

# ஆட்சி மாற்றம் ஏற்பட்டமையால் ஒழுக்கமுள்ள நாடாக இலங்கை!

## மஹிந்த அமரவீர கூறுகின்றார்

கொழும்பு, நவ. 25

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்று ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடனேயே நாடு மீண்டும் ஒழுக்கமும் நீதியுமுடையதாக உருமாறியுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை – வலஸ்முல்ல பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மக்கள் தாமாக உணர்ந்து மாற்றத்தை ஏற்படுத்த தற்போது ஆரம்பித்துள்ளனர்.

எந்தவொரு பிரஜையும் அரச திணைக்களத்துக்குச் செல்லாமல் தமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளக்கூடிய நிலைமை நாட்டில் உருவாக்கப்படவேண்டும் என்ற இலக்கு ஜனாதிபதிக்கு இருக்கின்றது.

இதற்குக் காரணம் தற்போது வெளிநாடுகளில் மின்னஞ்சல் ஊடாகவே தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியளவில் தொழிநுட்பம் வளர்ச்சியடைந்துள்ளது. இதனை நாமும் பின்பற்றினால் நாட்டு மக்கள் பெரும் நன்மையடைவார்கள் என அவர் கருதுகிறார்.

இதேவேளை நியமிக்கப்படவுள்ள இராஜாங்க அமைச்சர்களுக்கு புதிய வாகனங்கள் கொள்வனவு செய்யவேண்டிய அவசியமில்லை. ஏற்கனவே அரசில் காணப்படும் வாகனங்கள் போதுமானவையாக இருக்கின்றன. அதேபோன்று எந்தவொரு திணைக்களத்துக்குமான கட்டடங்களை வாடகைக்கு பெறத் தேவையில்லை. அமைச்சுக்கள் காணப்படும் கட்டடங்களிலேயே அவற்றை உள்ளடக்க முடியும்–என்றார். (ஐ)

# தலைமை மாறாவிட்டால் தனித்துப் பயணிப்போம்

## மனு நாணயக்கார எச்சரிக்கை

கொழும்பு, நவ. 25

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றமொன்று நிகழாவிட்டால், தனியான பாதையொன்றில் பயணிக்கவேண்டிய நிலைமை ஏற்படுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினரான மனு நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

நாம் அரசியலில் நுழைந்த காலத்தில் மட்டுமல்ல, நாம் பாடசாலைக்குச் சென்ற காலத்தில் கூட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கதான் இருந்து வந்தார்.

ஆனால், இன்று எமது கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் கட்சியைப் புதிய பாதையில் வழிநடத்திச் செல்லவே எதிர்ப்பார்க்கிறார்கள்.

இதற்குப் புதிய தலைமைத்துவமொன்று அவசியமாகவுள்ளது. சஜித் பிரேமதாஸ தலைமையிலான பயணத்தையே அனைவரும் விரும்புகிறார்கள்.

இதில் கட்சிக்குள் ஏதும் சிக்கல் ஏற்பட்டால், தனியாக பயணிப்போம் என்றும் பலர் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இவ்வேளையில், மக்களின் கருத்துக்குச் செவிசாய்ப்பதுதான் உரிய ஒன்றாகும் என்று நாம் கருதுகிறோம்.

இதனை விடுத்து, தனிப்பட்ட அரசியல் சுயலாபத்திற்காக அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதை நாம் என்றும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை–என்றார். (ஐ)

### கோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கை எமக்கு இல்லை. எனினும் தீர்வுகளை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களை உருவாக்குவோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்– ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை நாமோ அல்லது தமிழ் மக்களோ எதிர்பார்த்திருக்கவில்லை. அதனால் இந்த மாற்றத்தின் விளைவுகள் எவ்வாறானவை என்ற எண்ணத்தில் மக்கள் பார்த்துக்கொண்டுள்ளனர். எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனநாயக ரீதியில் வெற்றி பெற்றுள்ள நிலையில் ஜனநாயக நாட்டில் அவருடன் சேர்ந்து பயணிக்க நாமும் தயாராக உள்ளோம்.

தான் சிங்கள, பௌத்த மக்களின் வாக்குகளில் வெற்றி பெற்றுள்ளதாகவும் எனினும் ஜனாதிபதி என்ற ரீதியில் நாட்டின் சகல மக்களுக்குமான தலைமைத்துவ ரீதியில் என்னுடன் தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து பயணிக்க வரவேண்டும் என கூறினார்.

எவ்வாறு இருப்பினும் அவர் அதிகளவான வாக்குகளை பெற்றாலும் கூட தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் அவருக்கு கிடைக்கவில்லை. வடக்கு–கிழக்கில் 10 சதவீத தமிழ் வாக்குகளை கூட பெற்றிருக்கவில்லை. இது அவரை தாக்கத்துக்கு உள்ளாக்கும் விடயமாக இருக்கவேண்டும்.

வடக்கு–கிழக்கு மற்றும் மலையக மக்களும் கிறிஸ்தவ மக்களும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவை வழங்கவில்லை. சிங்கள மக்களின் வாக்குகள் மட்டுமே அவருக்குக் கிடைத்தமை ஓர் இழுக்காகக் கருதலாம். அதனாலோ என்னவோ அவர் தமிழ் பேசும் மக்களைத் தன்னுடன் இணைய அழைப்பு விடுத்திருக்க முடியும்.

நாம் அவருக்கு கூறுவது ஒன்றுதான், தமிழ் மக்கள் ஏன் ஆதரிக்கவில்லை என்றால் இன்னமும் அவர் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைக்கவில்லை என்பதேயாகும். ஆகவே தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி பேசி தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க உடனடியாக முன்வரவேண்டும். அப்படியான ஒரு செயற்பாட்டில் கலந்துரையாடி இணைந்து செயற்படத் தயாராக உள்ளோம். இவற்றை நாம் அவர்களிடம் கூறியுள்ளோம்.

எனினும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுகள் தொடர்பான விடயத்தில் அவர்கள் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பார்கள் என நம்பிக்கை இன்னமும் இல்லை. கடந்த காலத்தில் பிரதான இரண்டு கட்சிகள் இணைந்து ஆட்சியமைத்த நேரத்தில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ள நல்லதொரு வாய்ப்பு கிடைத்தது. அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தவேண்டிய கட்டாய தேவை எமக்கு இருந்தது.

தீர்வு விடயத்தில் அது முடிவுக்கு கொண்டுவர முடியாது போனாலும் கூட நாம் வெகுதூரம் இதில் பயணித்தோம். அதன் விளைவாக அரசமைப்பு வரைவு ஒன்றைக் கூட உருவாக்கிக் கொள்ள முடிந்தது. தீர்வை எட்ட சிறிய நகர்வுகள் இருந்த நேரத்தில் பிரதான கட்சிகள் முரண்பட்டு ஆட்சியை குழப்பினர்.

தமிழ்த் தேசியப் பிரச்சினைகள் எதனையும் பற்றிப் பேசாத ஒருவர் ஜனாதிபதியாகியுள்ளார். ஆகவே அவர் மூலமாக தீர்வுகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. எனினும் சந்தர்ப்பங்களை உருவாக்குவோம். தமிழ் மக்கள் ஜனாதிபதியை புறக்கணித்தமையை தேர்தல் முடிவுகள் தெளிவாகக் காட்டுகின்றன. அவ்வாறு இருக்கையில் தமிழ் மக்களின் தலைமைகளுடன் பேசுவதே சிறந்த தெரிவாக இருக்கும்.

கோட்டாபய ராஜபக்ஷவுடன் நான் தனித்தே பேசியிருந்தேன். கட்சியாகப் பேசவில்லை. இந்தச் சந்தர்ப்பங்களில் அரசியல் தீர்வு விடயத்தில் அவருக்குத் தெளிவான சிந்தனை இருக்கவில்லை. ஏனைய விடயங்கள் குறித்து பேசினார். தொடர்ச்சியாக பேச்சு நடத்தினார்கள். அந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் என்னை தனியாகவே சந்தித்தார்கள். ஒரு சந்தர்ப்பத்திலும் கூட்டமைப்பாக பேச அவர்கள் தயராக இருக்கவில்லை. அரசியல் தீர்வு குறித்து அவர்கள் பேச முன்வரவில்லை. அவர்களைப் பொறுத்தவரை தெளிவான அரசியல் தீர்வு நகர்வுகள் இருக்கவில்லை.

அரசியல் தீர்வில் அதிகாரப் பகிர்வு விடயத்தில் 13 ஆம் திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வுகளை வழங்குவதாக மஹிந்த வாக்குறுதிகளை கொடுத்துள்ளார். எமக்கு மட்டும் அல்ல இந்தியாவுக்கும் இந்த வாக்குறுதி கொடுத்துள்ளனர். கடந்த தடவை இந்தியப் பிரதமர் மோடி இலங்கை வந்தவுடன் பேசினோம். தமிழ் மக்களின் தீர்வு விடயங்களில் இந்தியாவின் ஈடுபாடு இருக்கும்.

இலங்கை–இந்திய ஒப்பந்தம் இன்றும் நடைமுறையில் உள்ளது. ஆகவே தமிழ் மக்களுக்கு ஏதும் நிகழ்ந்தால் அவர்கள் அக்கறை செலுத்துவார்கள். தேர்தல் முடிவுகளைப் பார்த்து தமிழ் மக்களின் விடயங்களில் அக்கறை செலுத்தவேண்டும் என்ற விடயத்தை இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வலியுறுத்துவார். அது நிச்சயமாக நடை பெறும்–என்றார்.

JSAC
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
குடும்பத்தில் சமத்துவம் சமாதானம் பேணி சமுதாயத்தில்
பெண்களிற்கெதிரான வன்முறைகளை ஒழித்திடுவோம்
16
2019

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு தடவைகளிலும் முதல் ஆப்பை இறக்கியவர் நமது 'பயர்பிராண்ட்' அரசியல்வாதி சிவாஜிலிங்கம்தான்.

2010 இலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ராஜபக்ஷவுக்கு எதிராக சரத் பொன்சேகாவை ஆதரித்தது.

இம்முறையும் – 2019 இலும் – மற்றைய ராஜபக்ஷவுக்கு எதிராக சஜித் பிரேமதாஸவை ஆதரித்தது கூட்டமைப்பு.

இரண்டு தடவைகளும் அன்னச் சின்னத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவுடன் போட்டியிட்ட வேட்பாளர்கள் ஒரு மில்லியனுக்கும் குறையாத வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டனர்.

அதுவல்ல விடயம்.

இரண்டு தடவைகளிலும் ரெலோ கட்சியை உடைத்துக் கொண்டு போய் அந்தத் தேர்தல் களத்தில் தானும் ஒரு வலுவான வேட்பாளர் போல களமிறங்கி வாங்கிக் கட்டினார் சிவாஜிலிங்கம்.

2010 தேர்தலுக்கான 2009 இறுதியில் சிவாஜிலிங்கம் வேட்பு மனுத் தாக்கல் செய்யும்போது அவர் கூட்டமைப்பு எம்.பி.. அவருடன் தோள் கொடுத்த சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவும் அப்போது கூட்டமைப்பு எம்.பிதான்.

அதில் இருந்து கொண்டுதான் அப்போது விக்கிரமபாகு கருணாரத்தினவின் கட்சியின் சார்பில் குடைச் சின்னத்தில் போட்டியிட்டு மண் கவ்வினார் சிவாஜி.

இம்முறை 2019 ஜனாதிபதித் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட – அங்கீகரிக்கப்பட்ட கட்சி ஏதும் கிடைக்காதமையால் சுயேச்சையாக மீன் சின்னத்தில் களமிறங்கினார் அவர்.

ரெலோவினதும் கூட்டமைப்பினதும் பொதுவான கட்சிக் கட்டுப்பாட்டை முழுமையாக மீறியபடியால் அப்போது இரண்டிலிருந்தும் சிவாஜியும் ஸ்ரீகாந்தாவும் ஒன்றாக வெளியேற்றப்பட்டனர்.

அவர்கள் இருவரும் *'தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு'* என்ற ஒரு புதுக் கட்சியை ஆரம்பித்தனர்.

அந்தக் கட்சி நீண்டகாலம் ஓடவில்லை. சுமார் இரண்டு வருடங்களுக்குள்ளேயே அதனைக் கைவிட்டுவிட்டு மீண்டும் வந்து ரெலோவுக்குள் இணைந்தனர் இருவரும்.

ஸ்ரீகாந்தாவை கட்சியின் பொதுச் செயலாளராகவும் சிவாஜிலிங்கத்தை கட்சியின் தவிசாளராகவும் உயர்த்தியது ரெலோ.

ஆனாலும் அவர்கள் அதில் நீண்டகாலம் நின்று பிடிக்கவில்லை. மீண்டும் இப்போது ஜனாதிபதித் தேர்தல் வந்ததும் சிவாஜி சுயேச்சையாகக் களத்தில் குதித்தார்.

இரண்டு தடவைகளிலும் ராஜபக்ஷக்களுக்கு எதிராக விழக்கூடிய தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரித்து ராஜபக்ஷக்களைக் காப்பாற்றவே சிவாஜி அப்படித் தம்பாட்டில் தேர்தல் களத்தில் இறங்கினார் என்று குற்றம் சுமத்தப்பட்டது.

இந்தத் தடவை ரெலோ நடவடிக்கை எடுக்க முன்னரே அக் கட்சியின் தவிசாளர் பதவி உட்பட முக்கிய பொறுப்புக்களில் இருந்து தாமாகவே முன்கூட்டியே விலகிக் கொண்டார் சிவாஜிலிங்கம்.

ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் கட்சியின் தீர்மானத்தை மீறி சுயேச்சை வேட்பாளர் சிவாஜிக்கு ஆதரவாக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டமையால் கட்சியின் செயலாளர் நாயகமான சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவை கட்சியிலிருந்து இடைநிறுத்தி முடிவு எடுத்தது ரெலோ. அவரின் நடத்தைக்காக அவரிடம் விளக்கம் கேட்கத் தீர்மானித்தது அக் கட்சி.

ஆனால், ஸ்ரீகாந்தாவின் திட்டம் வேறுவிதமாக இருக்கின்றது. ரெலோ கட்சி அவரைப் பொறுத்தவரை சுட்டமண். அதனுடன் மீண்டும் ஒட்டும் எண்ணம் ஏதும் அவருக்கு இல்லை.

தன்னுடைய செயற்பாடுகளுக்கான காரணங்களை கட்சியின் பிரதான உறுப்பினர்களுக்கு விளக்கமாக எழுத அவர் தீர்மானித்துள்ளார். ஆனால் அது அக்கட்சியில் தொடர்ந்து நீடிக்கும் எண்ணத்திலோ, விருப்பினாலோ அல்ல. அப்படி நீடிக்கும் எண்ணம் ஏதும் அவருக்கு அடியோடு இல்லை என்றும் தெரிகின்றது. தன்பக்கத்தில் உள்ள நியாயங்களை – நீதிகளை – உண்மைகளை – கட்சியை விட்டு வெளியேறும் போது அதன் பிரதான உறுப்பினர்களுக்கு எடுத்துரைப்பது மட்டுமே அவரின் இலக்கு.

சரி, ரெலோவில் இடம்பெறும் எண்ணம் அவருக்கு இல்லை. அக்கட்சிக்குத் தலைமுழுகினால் அவரின் அடுத்த கட்டம் என்ன? அரசியலில் இருந்து ஒதுங்குவாரா? இல்லவே இல்லை.

அவர் சற்று நோயாளிதான். ஆனால் அதற்காக அரசியலில் இருந்து உடனடியாக ஒதுங்கும் எண்ணம் ஏதும் அவருக்குக் கிடையவே கிடையாது.

*"பொறுத்து இருங்கள். அடுத்த ஒருவாரத்துக்குள் புதிய கட்சி மலரும்"* – என்கின்றார் அவர்.

இந்த ஆண்டு முடிவடைவதற்கு இன்னும் பத்து வாரங்கள் கூட இல்லை. அதற்குள் புதிய கூட்டணியில் அக்கட்சி இருக்கும் என்றும் அவர் அடித்துக் கூறுகின்றார்.

நிச்சயமாக அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அல்ல என்பது தெளிவு.

முன்னாள் முதல்வர் சி.வீ. விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சுரேஷ் பிறேமச்சந்திரன் போன்றோர் இணையும் அணியாக அது இருக்கும் என நம்பலாம்.

ஆனால், அரசியல் என்பது மந்திரத்தில் மாங்காய் பறிக்கும் வேலை அல்ல. எப்படிச் சாதிக்கப் போகின்றனர் ஸ்ரீகாந்தா, சிவாஜி, சபா.குகதாஸ், சில்வெஸ்டர் விமல்ராஜ், ஜெயரட்ணம் ஜனார்த்தனன் போன்ற ரெலோவின் "ஜின்ஜர்" குழுவினர்? இவர்கள் எல்லோரும் பெரும்பாலும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ரெலோவை விட்டு வெளியேறி தனிக்கட்சி ஆரம்பிக்கும் இத் தரப்புக்கு வன்னியிலும், கிழக்கிலும் என்ன அரசியல் அடித்தளம் என்பது தெரியவில்லை.

இனித்தான் பரீட்சித்துப் பார்க்க வேண்டிய விவகாரம் அது.

சிவாஜி, ஸ்ரீகாந்தா வெளியேற்றத்தால் ரெலொவின் தவிசாளர், பொதுச் செயலாளர் ஆகிய பதவிகள் இரண்டும் காலியாகின்றன. அதுவும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கட்சியின் மூத்த இரு உறுப்பினர்களின் வெளியேற்றத்தால் அந்த வெற்றிடங்கள் ஏற்படுகின்றன.

அந்த இடங்களை கட்சியின் யாழ்ப்பாண உறுப்பினர்களைக் கொண்டு ரெலோ நிரப்புமா? அல்லது வன்னியிலும் கிழக்கிலும் இருந்து எடுபிடிகளைக் கொண்டு வந்து அந்த இடங்களுக்கு ரெலோ நியமிக்குமா?

அவதானத்துடன் பார்த்து இருக்கின்றது தமிழ்ச் சமூகம்.

- மின்னல் -

## சி.ஐ.டி. அதிகாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றங்கள் விசாரணை அலகின் பொறுப்பதிகாரியான நிசாந்த சில்வா, முக்கியமான பல வழக்குகளின் விசாரணை அதிகாரியாகச் செயற்பட்டு வந்தார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பல குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகளை ஒருங்கிணைக்கப்பட்ட குற்றச்செயல்கள்விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரியான நிசாந்த சில்வா முன்னெடுத்து வந்தார்.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என 13 கடற்படை அதிகாரிகளைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினார். சுன்னாகம் பொலிஸ்தடுப்பில் சுமணன் என்ற சந்தேகநபர் சித்திரவதையின் பின் கொலை செய்யப்பட்ட குற்றச்சாட்டில் 6 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுத்திருந்தார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை குறித்தும் இவரே புலனாய்வு செய்து குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையை பெற்றுக் கொடுத்திருந்தார்.

மஹிந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற லசந்த விக்ரமதுங்க உள்ளிட்ட ஊடகவியலாளர் படுகொலைகள், மற்றும் கீத் நொயார், உபாலி தென்னக்கோன், நாமல் பெரேரா உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான அவன்ட் கார்ட் வழக்கு, ராஜபக்ஷ குடும்பத்தினர் தொடர்புபட்டுள்ள வசீம் தாஜுதீன் கொலை வழக்கு உள்ளிட்ட பல முக்கியமான வழக்குகளின் விசாரணைகளைக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர், மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபயசேகரவின் கீழ் பிரதான பொலிஸ் இன்பெக்டர் நிசாந்த சில்வா முன்னெடுத்திருந்தார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபயசேகரவின் கடந்த வாரம் இடமாற்றப்பட்ட நிலையில் நிசாந்த சில்வா குடும்பத்துடன் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். (ஐ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யடைந்துள்ள நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்துரையாடவுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்–

பொதுஜன முன்னணியின் கீழ் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, கலந்துரையாடத் தீர்மானித்துள்ளது.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், இரு கட்சிகளும் பொதுக்கூட்டணியின் கீழ் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

அந்தவகையில் தற்போது பொதுத் தேர்தலில் போட்டியிடும் முறைமை குறித்தும், வேட்பாளர்கள் நியமனம் தொடர்பிலும் இரு கட்சிகளும்கலந்துரையாடவுள்ளன.

இந்தக் கலந்துரையாடல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது – என்றார். (முன்னர் வந்த செய்தி 11 ஆம் பக்கத்தில்)

## விக்கி தலைமையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் புத்திஜீவிகள் குழுவினர் அடுத்து வரும் நாள்களில் சமயத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிவில் தரப்பினர் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

தமிழ் மக்கள் கூட்டணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகம், தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், ரெலோவில் முரண்பாடுகள் காரணமாக மாற்றுநிலைப்பாடுகளைக் கொண்டிருக்கும் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தலைமையிலான அணியினர் ஆகிய தரப்பினருடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றனவெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் பல்கலைக்கழக மாணவர்களின் ஒருங்கிணைப்பில் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள ஐந்து கட்சிகள் ஒருங்கிணைக்கப்பட்டு 13அம்சக் கோரிக்கைகள் தயாரிக்கப்பட்டிருந்தபோதும் அதனை மையப்படுத்தி அடுத்த கட்டச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது போயிருந்தது.

அத்துடன், ஐந்து கட்சிகளும் தனித்தனியாகத் தத்தமது தீர்மானங்களை வெளிப்படுத்தியமையால் கூட்டிணைந்து செயற்பட முடியாத சூழலும் ஏற்பட்டிருந்தது. மேலும், ஜனாதிபதித் தேர்தலுக்கு சொற்பகாலமே இருந்தமையால் ஐந்து கட்சிகளை இணக்கப்பாட்டின் அடிப்படையில் தொடர்ச்சியாக முன்னகர்த்துவதற்கான கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடியாதும் போயிருந்தது.

இந்நிலையில், எதிர்வரும் மார்ச்மாதம் 17ஆம் திகதி நாடாளுமன்றம் கலைப்பதற்கு ஏதுவான நிலைமைகள் காணப்படுகின்ற நிலையில், தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைக்கும் செயற்பாடுகளை வேளையுடன் ஆரம்பித்துள்ளதாக அந்தச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள புத்திஜீவிகள் குழுவைச் சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தமிழ் மக்கள் கூட்டணிக்கும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் இடையில் பொதுத்தேர்தலுக்கான கூட்டணி குறித்த பேச்சுகள் ஏற்கனவே ஆரம்பித்துள்ளனவெனவும் கொள்கை ரீதியான உடன்பாட்டைக் கொண்ட கட்சிகள் புதிய கூட்டில் இணைந்து கொள்வதற்கு எவ்விதமான தடைகளும் இல்லையென்றும் அந்தக் கட்சிகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## ரிஷாத் எம்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீது கல்லெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவவியும் பயணித்தார்.

முந்தல், கனமூல பகுதியில் மக்கள் சந்திப்பை நடத்திவிட்டு நேற்று மாலை திரும்பியபோது அவர்கள் சென்ற வாகனத் தொடரணி மீது கல்லெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் தமது கட்சியைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்துள்ளார் என்று முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

முந்தல் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியமையுடன் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## வீதிப் பெயர்ப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷ, பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பாணாந்துறை மற்றும் கெரவலப்பிட்டிய ஆகிய பகுதிகளில் உள்ள வீதிகளின் பெயர்ப்பலகையில் உள்ள தமிழ்மொழி இனந்தெரியாதோரால் கடந்த சில நாள்களில் அகற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியதுடன், ஆட்சி மாற்றத்தின் பின் சிறுபான்மை மக்களை அச்சுறுத்தும் பேரினவாத சக்திகளின் ஆட்டம் ஆரம்பம் என்று சமூக ஊடகங்களில் பலரும் விமர்சித்து வந்தனர்.

இந்த நிலையில் வீதிகளின் பெயர்ப்பலகைகளில் உள்ள தமிழ்மொழியை அகற்றியவர்கள் தொடர்பில் உடன் விசாரணைகளை ஆரம்பித்து அவர்களைக் கைது செய்யுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பதில் பொலிஸ் மா அதிபருக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று மாலை இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார். (ஐ)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்வதற்காக அக்கட்சியின் அரசியல் குழு விரைவில் மீண்டும் ஒரு தடவை கொழும்பில் கூடி ஆராயும்.

நேற்று திருகோணமலையில் நடைபெற்ற கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

கட்சியின் திருகோணமலை அலுவலகத்தில் நேற்றுக் காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா எம்.பியின் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது..

கூட்டத்தில் இரா.சம்பந்தன், சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், சி.வீ.கே.சிவஞானம், எஸ்.எக்ஸ். குலநாயகம், கட்சியின் செயலாளர் துரைராசசிங்கம் ஆகியோர் கூட்டத்தில் பங்குபற்றினர்.

அரசியல் குழுவின் உறுப்பினர்களான வைத்தியர் ப.சத்தியலிங்கம், கலையரசன், செல்வராசா ஆகியோர் நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் பெறுபேறுகள் குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. சாதக, பாதகங்கள் அலசப்பட்டன.

விரைவில் பொதுத்தேர்தல் நடத்த இருப்பதால், அதை ஒட்டி வகுக்க வேண்டிய தந்திரோபாயங்கள், உத்திகள் குறித்து ஆராய்வதற்காக மீண்டும் கொழும்பில் அரசியல் குழுவின் கூட்டத்தைக் கூட்டுவது என்றும் நேற்று தீர்மானிக்கப்பட்டதாக அறிய வந்தது.

## 3 வீதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளன. எனினும் ஒரு வீதியில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் அகற்றப்பட்டுள்ளன.

பாணந்துறையில் உள்ள சுசந்த மாவத்தை மற்றும் வத்தளை கெரவலப்பிட்டிய வீதி பெயர்ப்பலகைகளிலேயே தமிழ் மொழி மீண்டும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் வீதிப் பெயர்ப்பலகைகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இடம்பெற வேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்படும் நிலையில் சிறுபான்மை மக்களை அதிருப்தியடைய வைக்கும் வகையில் இந்தச் செயற்பாடு அமைவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

வத்தளை கெரவலப்பிட்டிய வீதியின் பெயர்ப்பலகையில் தமிழ்மொழி நீக்கப்பட்டதாகச் செய்தி வெளியாகி 9 மணி நேரத்தின் பின் அது மீளவும் பொருத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பாணந்துறை சுசந்த மாவத்தை வீதியின் பெயர்ப்பலகையில் தமிழ்மொழி மீது வர்ணம் பூசப்பட்ட நிலையில் நேற்று மீண்டும் தமிழ்மொழியில் வீதியின் பெயர் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப்பணியை பாணந்துறை நகர சபை முன்னெடுத்தது.

இதேவேளை, வீதிகளின் பெயர்ப்பலகைகளில் காணப்படும் தமிழ்மொழியை நீக்கும் பணியை அரசியல் குழு ஒன்று முன்னெடுப்பதாகத் தெரிவித்துள்ள சிறிலங்கா பொதுஜன பெரமுன, இதுதொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பொலிஸார் சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளனர் என்று தெரிவித்துள்ளது. (ஐ)

## ஹைஏஸ் வாகனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞனை மோதித்தள்ளிய ஹைஏஸ் வாகனம் நிறுத்தாது அங்கிருந்து தப்பிச் சென்றபோதும் பொதுமக்கள் துரத்திப் பிடித்து சாரதியை நையப்புடைத்த பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் 17 ஆம் கட்டையைச் சேர்ந்த சந்திரன் ஜீவகுமார் (வயது – 19) என்ற இளைஞனே விபத்தில் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த புதுக்குடியிருப்புப் பொலிஸார், சாரதியைக் கைது செய்துள்ளனர். (ஐ)

## தமிழரசுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அக்கட்சியின் அரசியல் குழு தீர்மானித்திருக்கின்றது.

நேற்றுக் காலை திருகோணமலையில் நடைபெற்ற இந்தக் குழுவின் கூட்டத்தில் இது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது என அறிய வந்தது.

தந்தை செல்வாவினால் 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் 18ஆம் திகதி கொழும்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

அதன் எழுபதாவது ஆண்டு நிறைவு வரும் 18ஆம் திகதியாகும். அதை ஒட்டி வரும் டிசெம்பர் 11 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை தமிழர் தாயகம் எங்கும் தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளை விளக்கும் எழுச்சி நிகழ்வுகளை நடத்தவும் –

எழுபதாவது ஆண்டு நிறைவு நிகழ்வை வரும் 18ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பெரிய விழாவாக முன்னெடுக்கவும் –

நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறியவந்தது.

## கிழக்கு ஆளுநராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின் பேரிலேயே இந்த நியமனத்தைப் பெற்றுக்கொள்ளவுள்ளார் எனப் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கூறினார்.

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்றமையையடுத்து, ஏற்கனவே பதவி வகித்த 9 மாகாணங்களுக்குமான ஆளுநர்களை உடனடியாகப் பதவி விலகுமாறு ஜனாதிபதி செயலகம் கடந்த வாரத்தில் உத்தரவிட்டது. இதற்கு அமைவாக அனைத்து ஆளுநர்களும் பதவி விலகினர். இதனடிப்படையில் 6 மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். எனினும் வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணத்துக்கான ஆளுநர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கிழக்கு மாகாண ஆளுநராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதற்கான நியமனத்தை இவ்வாரம் அவர் பெற்றுக் கொள்ளவுள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மற்றும் தென் மாகாணத்திற்கான ஆளுநர்கள் தொடர்பான தீர்மானம் இன்று மேற்கொள்ளப்படவுள்ளது. (ஐ)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கோட்டாபயவின் உத்தரவில் முப்படையினரையும் பொதுமக்கள் பாதுகாப்புப் பணிக்கு அமர்த்தும் அதிசிறப்பு வர்த்தமானி அறிவிப்புப் பற்றி விளக்கமளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து அனைத்துக் குடிமக்களும் இன, மத பேதமின்றி கௌரவத்துடன் வாழக் கூடிய சூழலை உறுதிப்படுத்துவதற்காகவே முப்படையினரைக் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கான சிறப்பு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டு ஜனநாயகம் கேள்விக்கு உட்படுத்தப்பட மாட்டாது.

நாட்டில் சாதாரணமாக சட்டத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் ஏற்படும்போது பொலிஸாருக்கு அவை தொடர்பில் அறிவிக்கப்படும். நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாத்து நாட்டு மக்களுக்கு ஒழுக்கமானதும் அமைதியானதுமான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்க ஏதேனுமொரு பிரதேசத்தில் பிரச்சினைகள் ஏற்படும்போது பொலிஸாரால் அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் போகும் போது, பொலிஸில் சிறப்புப் பயிற்சி பெற்ற சிறப்பு அதிரடிப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் – என்றார். (ஐ)

## அடுத்த 20...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் ஆட்சியே நிலவும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவின் அமோக வெற்றியுடன் இந்த நாட்டில் புத்துணர்வும் மாற்றம் ஒன்றும் ஏற்பட்டுள்ளது. பெரும்பான்மை மக்களின் முழுமையான ஆதரவும், சிங்கள பௌத்த அடையாளமும் கிடைத்துள்ளது. சிறுபான்மை மக்களின் ஆதரவும் கிடைத்திருக்கும். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் திட்டமிட்டு சிறுபான்மை மக்களின் ஆதரவு கிடைக்காத வகையில் செயற்பட்டனர். எனினும் நாம் ஆட்சிக்கு வந்துள்ள நிலையில் சகல மக்களையும் அரவணைத்துச் செல்லவே முயற்சிக்கின்றோம்.

இப்போது எமக்குக் கிடைத்து வெற்றியின் மூலமாக அடுத்த இருபது ஆண்டுகளுக்கு ராஜபக்ஷாக்களின் அரசு தொடரும். நாம் செய்யும் வேலைத்திட்டங்கள், அபிவிருத்தித்திட்டங்கள், வாழ்வாதார நகர்வுகள் மூலமாக மக்கள் அனைவரும் எமது ஆட்சியைக் கொண்டு செல்லவே ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் இப்போது ஒரு அணியாக ஒன்றிணைந்து ஐக்கிய பயணம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும். அதற்கான அழைப்பை இப்போதும் நாம் விடுக்கின்றோம். மேலும் ஜனாதிபதித் தேர்தல் வெற்றியுடன் உடனடியாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி எமக்கான அரசு ஒன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே நோக்கமாகும்.

அதற்கான எண்ணம் எம்மிடம் உள்ளதைப்போலவே பொதுத் தேர்தலை நடத்த ஐக்கிய தேசியக் கட்சியும் முழுமையான ஒத்துழைப்பை எமக்கு வழங்க வேண்டும் – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## நாடாளுமன்றத்தை சிறிது காலம் முடக்கும் நோக்கத்தின் பின்னணி

நாடாளுமன்றத்தின் தற்போதைய கூட்டத் தொடரை தமக்குள்ள விசேட அதிகாரத்தைப் பயன்படுத்தி இடைநிறுத்தவும், தாமதமின்றி இயன்ற விரைவில் புதிய கூட்டத் தொடரை ஆரம்பிக்கவும் வழி செய்யும் வர்த்தமானி அறிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எந்நேரமும் விடுக்கக் கூடும் எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

வழமையாக ஒரு ஜனாதிபதி தமக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையில் முட்டுக்கட்டைகள், நெருக்கடிகள் வரும் போது, அத்தகைய அரசியல் நெருக்கடிகளை முகம் கொடுத்துச் சமாளிப்பதற்காக நாடாளுமன்றத்தைச் சில காலத்துக்கு முடக்குவது வழமை.

அப்படி நாடாளுமன்றத்தைத் தாம் விரும்பும் சமயங்களில் இரண்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு முடக்குவதற்கான அதிகாரம் அரசமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

அப்படி நாடாளுமன்ற அமர்வை ஜனாதிபதி முடக்கும் போது, இரண்டு மாத காலத்துக்கு மேற்படாத ஒரு வேளையில் அந்த நாடாளுமன்றம் பின்னர் கூட்டுவதற்கான நேரத்தையும் திகதியையும் அந்த வர்த்தமானி அறிவித்தலில் அவர் குறிப்பிட்டே அதனை முன்னெடுக்க வேண்டும்.

தேவையானால், பிறிதொரு வர்த்தமானி அறிவித்தல் மூலம், அவ்வாறு முடக்கி வைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை அவர் முற்கூட்டியே கூட்டுவதற்கும் பிரகடனம் செய்யலாம்.

கடந்த ஆண்டு ஒக்ரோபரில் அரசியல் சதிப்புரட்சி முன்னெடுக்கப்பட்ட போதும் நாடாளுமன்றத்தில் பிரச்சினைகளை எதிர்கொள்ளாமல் சமாளிப்பதற்காக இப்படி நாடாளுமன்ற முடக்கல் நடவடிக்கை ஒன்றை சில காலத்துக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கக் கூடும்.

இப்படி அரசியல் நெருக்கடி நிலை ஏதும் இல்லாத சூழலில் தற்போதைய நாடாளுமன்றத்தை முடக்கும் நடவடிக்கையை ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ ஏன் எடுக்க வேண்டும் என்று ஒரு கேள்வி எழுகின்றது.

அதற்குக் காரணங்கள் பலவுண்டு.

முதலாவது – முன்னைய அரசால் முன்னெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் தற்போதைய கூட்டத் தொடரை முடிவுக்குக் கொண்டு வந்து, புதிய அரசின் கீழ், புதிய கூட்டத் தொடரை புதிய உத்வேகத்துடன் ஆரம்பிக்க முடியும்.

அடுத்தது – நாடாளுமன்றக் கூட்டத் தொடர் முடக்கப்பட்டு புதிய தொடர் ஆரம்பிக்கப்படும் போது நாடாளுமன்றுக்கு ஜனாதிபதியே நேரில் வந்து, தமது அரசின் கொள்கை விளக்கப் பிரகடன உரை ஒன்றை சம்பிரதாயபூர்வமாக ஆற்றி, தொடரை ஆரம்பித்து வைப்பார். இப்போது கூட்டத் தொடர் முடக்கப்பட்டு அமர்வு புதிதாக ஆரம்பிக்குமாயின், அப்போது தமது புதிய அரசுக்கு வழிகாட்டவிருக்கும் தனது கொள்கை நிலைப்பாட்டை அங்கு ஜனாதிபதி பிரகடனப்படுத்தி, புதிய அரசை வழிப்படுத்தலாம்.

அத்துடன், இதுவரை ஒரு பிரதேச சபை உறுப்பினராகக் கூட இருந்தவர் அல்லர் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. நாடாளுமன்றத்தில் என்றும் உரையாற்றியவரும் அல்லர். நேரடியாக ஜனாதிபதி என்ற அந்தஸ்தோடு சபைக்கு வந்து நாடாளுமன்றத்தின் உயர் பீடத்தில் அமர்ந்தபடி நாட்டுக்கும், மக்களுக்கும், சர்வதேசத்துக்கும், புதிய அரசுக்கும், எதிரணியினருக்கும் தமது திட்டவட்டமான கொள்கைப் போக்கை வெளிப்படுத்தும் உரை ஒன்றைத் தாம் ஆற்றினால் அது தமது அரசு மீதான பிடியை வலுப்படுத்தும் என்று ஜனாதிபதி கருதுகின்றார் எனக் கூறப்படுகின்றது.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் இன்னொரு விடயமும் உண்டு.

நாடாளுமன்றத்தில் வழமையான நாடாளுமன்ற விவகாரங்கள், அமர்வுகளுக்கு அப்பால், பல்வேறு விடயங்களையும் கையாள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட உப குழுக்கள் போன்ற நிலையியல் குழுக்கள் உள்ளன.

இதுவரை ஐக்கிய தேசிய முன்னணி அரசே பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியை நடத்தி வந்தது. இதனால் மேற்படி நிலையியல் குழுக்களில் கணிசமான உறுப்புரிமையை அந்த அரசுத் தரப்பினரே கொண்டிருந்தனர்;கொண்டிருக்கின்றனர்.

புதிய அரசு பதவியேற்ற பின்னரும் அதே நிலையியல் குழுக்களே தொடருமாயின் புதிய அரசுக்கு அது பெரும் நெருக்கடியைத் தரும் விடயமாகவே இருக்கும்.

ஆனால், ஜனாதிபதியின் உத்தரவு மூலம் நாடாளுமன்றம் இடைநிறுத்தப்படுமானால் அத்தகைய நிலையியல் குழுக்களும், அவற்றின் அதுவரை காலமான நடவடிக்கைகளும் செயலிழந்து விடும். அத்தகைய சூழலில் முடக்கப்பட்ட நாடாளுமன்றம் மீண்டும் கூடும் போது புதிய நிலையியல் குழுக்களை நாடாளுமன்றம் நியமிக்கலாம்; நியமிக்க வேண்டும்.

முன்னைய ஐ.தே.முன்னணி அரசின் கைகள் ஓங்கியிருக்கும் நாடாளுமன்ற நிலையியல் குழுக்களைக் கலைத்துத் தமக்கு ஆதரவான உறுப்பினர்களை மீள அவற்றுக்கு நியமிப்பதற்கான வாய்ப்பையும் இப்படி சிறிது காலத்துக்கு நாடாளுமன்றத்தை முடக்கும் உத்தரவு தரும் என்பதாலும் அந்த முயற்சியை புதிய ஆளும் தரப்பு முன்னெடுப்பதாகத் தெரிகின்றது.

# கோட்டாவை மோடி நல்வழிப்படுத்துவார்!

## நம்பிக்கை தெரிவித்து மு.க.ஸ்டாலின் அறிக்கை





சென்னை, நவ.25

பிரதமர் மோடி ஈழத்தமிழர் பிரச்சினையை கோட்டாபய ராஜபக்ஷவிடம் உரிய முறையில் எடுத்துரைத்து, அவரின் உள்ளத்தின் ஓரத்தில் இருக்கும் தீயை அணைத்து, அவரை நல்வழி நியாய வழிப்படுத்தி, ஈழத் தமிழர்களுக்கு உதவிடும் அக்கறையான நடைமுறையை மேற்கொள்ளப் பெரிதும் வலியுறுத்துவார் என நம்புகிறேன்.

–இவ்வாறு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தாம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை. ஒன்றில் தெரிவித்திருக்கின்றார். அதில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு:–

பட்ட காலிலேயே படும் என்பதற்கொப்ப, பட முடியாது இனி துயரம் பட்டதெல்லாம் போதும் என்று, துன்ப துயரங்கள் அனைத்தையும் அனுபவித்துச் சோர்ந்து போயிருக்கும் ஈழத் தமிழர்களை மேலும் அச்சுறுத்திச் செயலிழக்கச் செய்திடும் எண்ணத்துடன், எடுத்த எடுப்பிலேயே –

"!இலங்கையில் தமிழர் பகுதிகளில் துப்பாக்கி ஏந்திய இராணுவத்தினர் இனிமேல் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுவார்கள்" என்று அறிவித்துள்ளதற்கும், தமிழர் பகுதிகளில் உள்ள தெருக்களின் தமிழ்ப் பெயர்களை அழிப்பதற்கும்,திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய அதிபர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ராஜபக்ஷ ஆகியோர் பதவிப் பொறுப்பேற்ற ஈரம் காய்வதற்குள், தமிழர்களின் இதயங்களைக் காயப்படுத்தி அவர்களின் கண்ணியத்தைக் குறைக்கும் பணி வேகமாகத் துவங்கி விட்டதும், இந்தியாவின் அப்பாவி மீனவர்களின் மீதான தாக்குதல் அதிகரித்து இருப்பதுமான அநியாயம், உலகத் தமிழர் மத்தியில் மிகுந்த ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி இருக்கிறது.

இலங்கையில் அமைந்துள்ள ராஜபக்ஷ குழுமத்தின் புதிய அரசில், தமிழர்களுக்கு நேர்ந்துள்ள இந்த நெருக்கடி குறித்து மத்திய அரசு உன்னிப்பாகக் கவனித்து, அதன் எதிர்காலப் பரிமாணங்களை ஆழ்ந்து பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கைகளை எடுத்து, ஈழத் தமிழர்கள் கண்ணியத்துடனும் சுயமரியாதையுடனும், அரசமைப்புச் சட்ட ரீதியிலான உரிமைகளுடன் அமைதியாக வாழ்வதற்கும், அவர்கள் விரும்பும் தீர்வு ஏற்படுவதற்கும், ஆவன செய்திட வேண்டும் என்று பிரதமர் நரேந்திரமோடியை கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கையில் தேர்தல் முடிந்தவுடன், தமக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் என வேறுபடுத்திப் பார்க்காமல் அனைவரிடத்தும் சமமாக நடந்து கொள்வேன் என கோட்டாபய அளித்த வாக்குறுதியை நினைவு கூர்ந்திடக் கேட்டுக் கொள்கிறேன்.

பிரதமர் மோடி ஈழத்தமிழர் பிரச்சினையை கோட்டாபய ராஜபக்ஷவிடம் உரிய முறையில் எடுத்துரைத்து, அவரின் உள்ளத்தின் ஓரத்தில் இருக்கும் தீயை அணைத்து, அவரை நல்வழி நியாய வழிப்படுத்தி, ஈழத் தமிழர்களுக்கு உதவிடும் அக்கறையான நடைமுறையை மேற்கொள்ள பெரிதும் வலியுறுத்துவார் என நம்புகிறேன்.– இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# வத்தளையிலும் வீதியொன்றின் பெயர்ப்பலகையில் தமிழ் நீக்கம்

கொழும்பு, நவ. 25

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தெற்கில் வீதி விதிகளின் பெயர்பலகையிலிருந்து தமிழை நீக்கும் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

பாணந்துறையில் உள்ள சுசந்த மாவத்தை வீதிப் பெயர்ப்பலகையிலிருந்த தமிழ் மொழி கடந்த வாரம் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வத்தளையில் கெரவலப்பிட்டிய வீதியின் தமிழ் மொழிப் பலகை கழற்றி வீசப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகளில் பேரினவாதக் கும்பல் ஒன்று ஈடுபடுவதாக சிறுபான்மை மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் வீதிப் பெயர்ப்பலகைகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இடம்பெறவேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்படும் நிலையில்




சிறுபான்மை மக்களை அதிருப்தியடைய வைக்கும் வகையில் இந்தச் செயற்பாடு அமைவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே ஜனாதிபதி, பிரதமர் இந்த நடவடிக்கைகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தவேண்டும் என பலரும் எதிர்பார்க்கின்றனர். (ஐ)




### நாளை

26.11.2019
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம்: அமாவாசை மு.இ. 09.33 வரை
திதி : விசாகம் மரண மு.ப. 10.25 வரை
இராகுகாலம் : 03.12 –04.42
சுப நேரம் : 10.42 – 12.12

# ரயில் மோதி முதியவர் சாவு!



யாழ்ப்பாணம், நவ. 25

காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்த தபால் ரயில் கந்தர்மடம், ஆத்திசூடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள ரயில் கடவையூடாகக் கடக்க முயன்ற முதியவர் மீது மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே பலியானார். இந்தச்சம்பவம் நேற்று முன் தினம் இரவு 9 மணிக்கு இடம் பெற்றது.

விபத்தில் உயிரிழந்தவின் உடல் ரயிலில் ஏற்றப்பட்டு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்தக் கடவைக்குச் சற்று தூரத்தில் யாழ் இந்து மகளிர் கல்லூரி இருப்பதால் அதிகம் மாணவர்கள் செல்லும் கடவையாக இது காணப்படுகிறது.

இங்கு கேற் அமைத்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை அதற்கு நடவடிக்கை எடுக்கபடவில்லை. (ஐ)

# கார் மோதி இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயம் அடைந்துள்ளனர்.

யாழ் – பலாலி வீதியில் பயணித்த கார் கந்தர்மடம் சந்திக்கு அண்மையாகவுள்ள அம்மன் வீதியில் திரும்ப முற்பட்டபோது அதே பாதையில் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து காருடன் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனும் யுவதியும் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு யுவதி அருகில் உள்ள தனியார் மருத்துவமனையிலும் இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர்.




விபத்து இடம்பெற்று அரை மணித்தியாலங்களிற்கு மேல் ஆகியும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வரவில்லை எனப் பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர். (ஐ)

# வாக்குறுதிகளை நிறைவேற்ற மிகச் சவாலான அமைச்சரவை

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, நவ. 25

ஜனாதிபதித் தேர்தலின்போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காகவே, இடைக்கால அரசொன்றை அமைத்துள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும், ஓர் அரசில் 16 அமைச்சர்கள் என்ற எண்ணிக்கையானது, மிகவும் சவாலான விடமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குருணாகலில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

இன்று எம்முன்னாள் மிகப் பெரிய பொறுப்பொன்று காத்துக் கொண்டிருக்கிறது. இது இடைக்கால அரசாகும்.



16 அமைச்சர்கள்தான் இதில் இருக்கிறார்கள். இந்த எண்ணிக்கையானது மாகாண சபைகளை 4 ஆக குறைப்பதற்கு சமமானதாகும்.

இதில் நிறைய சிக்கல்களும் சவால்களும் காணப்படுகின்றன. 16 அமைச்சரவைக்கும் உரிய அமைச்சர்களைத் தெரிவு செய்வது அவ்வளவு இலகுவான காரியமல்ல.

திறமையானவர்கள் பலர் இருந்தாலும், நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டே இந்த முடிவை எடுத்துள்ளோம்.

சிலருக்கு இது தொடர்பாக மனக் கவலை இருந்தாலும், நாட்டின் நலனுக்காக இவ்வாறான முடிவு எடுத்தமையை இட்டு தாங்கள் பெரிதாக வருந்தவில்லை என்று கூறியுள்ளார்கள்.

நாம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைவாகவே தற்போது செயற்பட்டு வருகிறோம்.

7 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இதனைத்தான் நாம் குறிப்பிட்டிருந்தோம். அதற்கிணங்கவே, நாம் தொடர்ச்சியாக செயற்படுவோம் – என்றார். (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், நவ.25

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில்**

புனிதநகர், மாதனை, கற்கோவளம், பருத்தித்துறை வெளச்சவீடு, கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, சிவப்பிரகாசம் 3 ஆம் குறுக்குத்தெரு ஆகிய இடங்களிலும்–

**வவுனியா பிரதேசத்தில் -**

மறக்கறம்பளை, கணேசபுரம் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் – மின் விநியோகம் தடைப் பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறி வித்துள்ளார்.

# வியாழேந்திரன், அங்கஜனுக்கு ராஜாங்க அமைச்சர் பதவிகள்?



கொழும்பு, நவ. 25

நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.வியாழேந்திரனுக்கும், அங்கஜன் இராமநாதனுக்கும் இராஜாங்க அமைச்சர் பதவிகள் வழங்கப்படலாமென அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இராஜாங்க அமைச்சர்கள் இன்று நியமிக்கப்படவுள்ளனர். இதன்போது, மட்டக்களப்பு, யாழ் மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரனுக்கும், தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுக்கும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# நாவலர் நினைவரங்க நிகழ்வு சனிக்கிழமை யாழ். இந்துவில்

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் கரிகணன் அச்சகத்தாரும் இணைந்து நடத்தும் நாவலர் நினைவரங்கம் எதிர்வரும் சனிக்கிழமை (30.11.2019) காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் உபதலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் முன்னிலை வகிப்பார்.

கல்லூரியில் உள்ள நாவலர் திருவுருவச்சிலைக்கு மலர் வணக்கம் இடம்பெற்றமையைத் தொடர்ந்து யாழினி ராஜ்குமார் மங்கலவிளக்கை ஏற்றிவைப்பார். யாழ். சக்சபோன் சகோதரர்களின் மங்கல இசையரங்கைத் தொடர்ந்து யாழ். இந்துக் கல்லூரியின் இந்து இளைஞர் கழகச் செயலாளர் சு.சுபப்பிரியன் வரவேற்புரையாற்றுவார். யாழ். இந்துக் கல்லூரி அதிபர் இ.செந்தில்மாறன் வாழ்த்துரையையும் தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தொடக்கவுரையையும் ஆற்றுவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர் ச. முகுந்தன் 'நாவலர் கருத்தியல் குறித்த பலபக்க விமர்சனங்களை முன்னிறுத்திய உரையாடல்'-என்றபொருளில் நினைவுப்பேருரையாற்றுவார். நாவலர் நாளையொட்டி யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே அன்று காலை நடத்துப்படும் போட்டிக்கான பரிசளிப்பும் நிகழ்வில் இடம்பெறும். பரிசுகளை தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வழங்கி மதிப்பளிப்பார்.

சிறப்பு நிகழ்வாக 'இன்றைய இளையோர் நாவலர் பாதையில் பயணிக்கின்றனர் – பயணிக்கவில்லை' என்ற பொருளில் அமைந்த பட்டிமண்டபம் இடம்பெறும். யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களான இ.கிருசாந்தன், ஜெ.கிசோக், வேம்படி மகளிர் கல்லூரி மாணவி அ.பிருந்திகா ஆகியோர் பயணிக்கின்றனர், எனவும் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் வே.சதுசிகன், யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி ச.கார்த்திகா, யாழ். இந்துக் கல்லூரி மாணவன் இ.அரண் ஆகியோர் பயணிக்கவில்லை எனவும் வாதிடுவர். தமிழ்ச்சங்கத்தின் உபதலைவர் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் நடுவராகச் செயற்படுவார்.



தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் விரிவுரையாளர் கு. பாலஷண்முகன் நன்றியுரை நல்குவார்.

# வைத்தியர்களையும் துரத்துகிறது டெங்கு!

வவுனியா, நவ. 25

வவுனியா வைத்தியசாலையில் கடமையாற்றும் இரண்டு வைத்தியர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். வவுனியாவில் டெங்கு நோய் வேகமாகப் பரவி வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்த சுகாதாரத் திணைக்களம் தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் 305 பேர் டெங்கு நோய் தாக்கம் காரணமாக சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்நிலையில் இந்த வைத்தியசாலையில் பணியாற்றும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த இரு வைத்தியர்களும் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகியுள்னர்.

இதனையடுத்து வைத்தியசாலை சூழல் மற்றும் வைத்தியர் விடுதி ஆகிய பகுதிகளில் டெங்கு நுளம்பை கட்டுப்படுத்த சுகாதார திணைக்களத்தினர் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# மகாராஷ்டிர சிக்கல்; நேற்று ஞாயிறு விசாரணை தீர்ப்பையும் இன்றே அளிக்கிறது உச்சநீதிமன்றம்!





மகாராஷ்டிராவில் பா.ஜ.கவை திடீரென ஆட்சியமைக்க அழைத்த ஆளுநரின் முடிவுக்கு எதிரான வழக்கில் இந்திய உச்சநீதிமன்றத்தில் நேற்று விசாரணை நடத்தியது. தீர்ப்பு இன்று வழங்கப்படவிருக்கின்றது.

மராட்டிய மாநிலத்தில் சிவசேனா, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் ஆகிய கட்சிகள் ஒன்று சேர்ந்து ஆட்சியமைக்கத் தயாராகி வந்த நிலையில் திடுதிப்பென பா.ஜ.கவின் தேவேந்திர பட்னாவிஸ் ஆட்சி அமைக்க ஆளுநர் அழைப்பு விடுத்து, அவரை முதல்வராகச் சத்தியப்பிரமாணம் செய்து வைத்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிவசேனா, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் ஆகிய கட்சிகள் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தன.

இந்தவழக்குத்தொடர்பானவிசாரணை உச்சநீதிமன்றத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை விடுமுறை நாளான போதிலும் நீதிபதிகள் ரமணா, அசோஹ் பூண், சஞ்ஜீவ் கண்ணா ஆகிய மூன்று பேர் கொண்ட அமர்வில் நடைபெற்றது.

ஞாயிறன்று விசாரணை நடத்தும் நிலைக்கு வருத்தம் தெரிவிப்பதாகவும், ஆனால் அதற்கு நாங்கள் மட்டுமே காரணம் அல்லர் என்றும் சிவசேனா வழக்கறிஞர் கபில் சிபல் தெரிவித்தார்.

மேலும், பதவிப்பிரமாணம் தொடர்பாக எந்த ஆவணமும் பொது வெளியில் காட்டப்படவில்லை. ஆளுநரின் செயல்பாடு ஒரு தலைபட்சமாக உள்ளது. பெரும்பான்மை இருந்தால் பா.ஜ.க. சட்டசபையில் நிரூபிக்கட்டும். தேர்தலுக்கு முந்தைய கூட்டணி உடைந்துவிட்டது. அமைச்சரவை பரிந்துரை இல்லாமல் ஜனாதிபதி ஆட்சி ரத்து செய்யப்பட்டுள்ளது என்று கபில் சிபல் தனது வாதங்களை முன் வைத்தார்.

அதேவேளையில், மராட்டியத்தில் ஆட்சி அமைந்துவிட்டது. எனவே இந்த மனுவை விசாரிக்கக் கூடாது என்று பா.ஜ.க. தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

நம்பிக்கை வாக்கெடுப்பை உடனே நடத்த உத்தரவிட வேண்டும் என சிவசேனா, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் நீதிமன்றத்தில் கோரிக்க. வைத்தன.

வழக்கு விசாரணை நேற்றைய தினமே முடிவடைந்த நிலையில் இன்றைய தினத்திற்கு தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

மத்திய அரசு, மகாராஷ்டிர அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பவும் உத்தரவிட்டது.

# பேராயர் மீது கன்னியாஸ்திரி பாலியல் குற்ற முறைப்பாடு!

## விசாரிக்க பொலிஸுக்கு உத்தரவு



கோட்டயம்,நவ.25

சமூக வலைத்தளங்களில் தமக்கு வரும் அச்சுறுத்தல் குறித்து கன்னியாஸ்திரி ஒருவர் பேராயருக்கு எதிராக அளித்துள்ள முறைப்பாட்டை விசாரிக்குமாறு பெண்கள் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டத்தை சேர்ந்த பேராயர் பிராங்கோ மூலக்கல் மீது ஒரு கன்னியாஸ்திரி கடந்த ஆண்டு பாலியல் முறைப்பாடு கொடுத்தார். அதன்பேரில், பேராயர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், பேராயருக்கு எதிராக கேரள மாநில பெண்கள் ஆணையம், தேசிய பெண்கள் ஆணையம், தேசிய மனித உரிமை ஆணையம் ஆகியவற்றுக்கும் அந்த கன்னியாஸ்திரி முறைப்பாட்டு மனு அனுப்பி வைத்துள்ளார்.

அதில், பேராயரும், அவருடைய ஆதரவாளர்களும் சமூக வலைத் தளங்களில் தன்னைப்பற்றி அவதூறாக விமர்சித்து வருகின்றனர் எனவும், அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார். இந்த முறைப்பாட்டை விசாரிக்குமாறு கேரள மாநில இணையதள குற்றப்பிரிவு பொலிஸுக்கு கேரள மாநில பெண்கள் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், 10 நாட்களில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸ் டி.ஜி.பியை அது கேட்டுக்கொண்டுள்ளது.

# ப.ஜ.கவின் அரசு மராட்டியத்தில் நிலைக்காது என்கிறார் சரத்பவார்

சிவசேனா, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கூட்டணி தொடர்வதாக அந்த 3 கட்சிகளும் அறிவித்துள்ளன. தங்களது கூட்டணிக்கு 170 எம்.எல்.ஏக்களின் ஆதரவு இருப்பதாக தெரிவித்துள்ள சரத்பவார், திடீரென பின்கதவால் ஆட்சி அமைதுள்ள பா.ஜ.கவால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது எனக் கூறியுள்ளார்.

மும்பையில் சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை நேற்று சந்தித்தனர்.

மகாராஷ்டிரத்தின் மீது பா.ஜ.க. 'சர்ஜிகல் தாக்குதல்' நடத்தியிருப்பதாகவும், பா.ஜ.கவின் உண்மையான முகம் தற்போது வெளிப்பட்டு விட்டதாகவும் உத்தவ் தாக்கரே விமர்சித்தார். சிவசேனா கட்சியை உடைக்க நினைத்தால், மகாராஷ்டிரம் அமைதியாக இருக்காது என்றும் அவர் எச்சரித்தார்.

தங்கள் கூட்டணிக்கு 170 எம்.எல்.ஏக்களின் ஆதரவு இருப்பதாக அப்போது குறிப்பிட்ட சரத்பவார், கட்சிக்கு எதிராக அஜித் பவார் செயல்பட்டுள்ளார் எனவும், அவர் மீதும், அவரை ஆதரிக்கும் கட்சியின் பிற எம்.எல்.ஏக்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார்.

விசாரணை அமைப்புகளுக்கு பயந்து பா.ஜ.கவை ஆதரிக்கும் முடிவை அஜித் பவார் எடுத்தாரா என்பது தமக்கு தெரியாது என்று கூறிய சரத்பவார், அவருடன் பதவியேற்புக்குச் சென்ற 11 எம்.எல்.ஏக்களில் 3 பேர் தன்னுடன் இங்கு வந்திருக்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க முடியாமல் பா.ஜ.க. அரசு கவிழும் என்ற சரத்பவார், அதன்பிறகு மாநிலத்தில் தங்களது கூட்டணி அரசமைக்கும் எனவும் தெரிவித்தார்.

அஜித் பவாருடன் பதவியேற்புக்குச் சென்ற எம்.எல்.ஏக்களில் ஒருவரான ராஜேந்திர சிங்கனேயும் செய்தியாளர் சந்திப்பில் உடனிருந்தார். பேச்சுக்கு வருமாறு தன்னை அழைத்த அஜித் பவார், ஆளுநர் மாளிகைக்குத் தன்னை அழைத்து சென்று விட்டார் என அவர் குறிப்பிட்டார்.

பாஜகவுக்கு ஆதரவளித்திருக்கும் அஜித் பவாருக்கு தேசியவாத காங்கிரஸின் மொத்தமுள்ள 54 எம்.எல்.ஏக்களில் 24 பேரின் ஆதரவு இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் அந்த கட்சியில் விரிசல் ஏற்படவாய்ப்பிருப்பதாகவும் அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

பா.ஜ.க. ஆட்சியமைத்திருப்பதை அரசியல் ரீதியாகவும், சட்டரீதியாகவும் காங்கிரஸ் எதிர்க்கும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் பாஜகவுக்கு தாவுவதை தடுக்க, ராஜஸ்தானின் ஜெய்ப்பூர் நகருக்கு அவர்களை அழைத்து செல்ல காங்கிரஸ் முடிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது

# திருமண வீட்டில் துப்பாக்கி வெடித்ததில் வீடியோகிராபர் பரிதாபமாக உயிரிழப்பு!



பீகார் மாநிலம் ஹாஜிப்பூரில் திருமண வீட்டில் நடந்த கொண்டாட்டத்தின் போது வீடியோகிராபர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அப்பகுதியில் திருமண நிகழ்வின் போது வானை நோக்கித் துப்பாக்கியால் சுடுவது வழக்கம்.

இதேபோல் திருமண நிகழ்வின்போது ஒருவர் தனது துப்பாக்கியில் தோட்டாவை நுழைத்துக் கொண்டிருக்கும் போது கைதவறி, விசையில் விரல்பட்டதால் துப்பாக்கி வெடித்தது.

திருமண நிகழ்வுகளை வீடியோ எடுத்துக் கொண்டிருந்தவரை நெஞ்சை அந்தத் தோட்டா துளைத்தது.

படுகாயமடைந்த அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு முன்பே உயிரிழந்தார்.

இது குறித்து ஹாஜிபூர் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

# பீகார் நிதி நிறுவனம் ஒன்றில் 55 கிலோ தங்கம் கொள்ளை

பீகாரில் உள்ள முத்தூட் நிதி நிறுவனத்தில் பட்டப்பகலில் 55 கிலோ தங்கத்தை கொள்ளையடித்த நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

ஹாஜிபூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் கிளை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நண்பகலில் முகமூடி அணிந்த 7 பேர் ஆயுதங்களுடன் உள்ளே புகுந்தனர். அங்கிருந்தவர்களைத் துப்பாக்கி முனையில் மிரட்டிய கொள்ளையர்கள், கொள்ளையைத் தடுக்க முயன்ற மேலாளரையும் தாக்கியுள்ளனர்.

புகாரின் பேரில் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். காவல்நிலையம் அருகிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் நிகழ்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கொள்ளைபோன தங்கத்தின் மதிப்பு (இந்தியப் பணத்தில்) 21 கோடி ரூபா எனவும், அலுவலக ஊழியர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இரு காவலாளிகள் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்ட போதிலும், அவர்களிடம் ஆயுதங்கள் இல்லாததால் கொள்ளையர்கள் எளிதாக நகைகளை அள்ளிச் சென்றுள்ளனர்.

# மூச்சுத்திணறும் டெல்லி மக்கள் குழந்தைகளுக்குக் கடும் பாதிப்பு

இந்தியாவின் தலைநகர் டெல்லியில் வசிக்கும் குழந்தைகள் தினமும் பத்து சிகரெட்டுகளை புகைப்பதற்கு நிகரான நச்சுக் காற்றைச் சுவாசித்து வருகின்றனர் என்று ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

அண்டை மாநிலங்களில் விவசாயிகள் வயலில் மிஞ்சிய கழிவுகளை தீயிட்டுக் கொளுத் துவதால் தலைநகரில் காற்று மாசு அடைந்துள்ளது. டெல்லியின் இடைவிடாத வாகனப் போக்குவரத்தால் இந்தப் பிரச்சினை மேலும் அதிகமாகக் காணப்படுகிறது.

டெல்லி நகர மக்கள் முகக் கவசங்கள் அணிந்தும் பெண்கள் துப்பட்டாவால் முகங்களை மூடிக் கொண்டும் நடமாடுகின்றனர். சிலர் கைக்குட்டைகளில் முகத்தை மூடிக் கொள்கின்றனர். மிகவும் ஆரோக்கியக் கேடான காற்று என நேற்று மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்தது.

கிட்டதட்ட 25 நாள்களாக டெல்லியில் காற்றுமாசுபட்ட அவசர நிலை நீடிக்கிறது. ஏராளமானோர் தொண்டைப் புண், சுவாசப் பிரச்சினை, கண்களில் எரிச்சல், குளிர் காய்ச்சல் போன்ற உடல் நல பாதிப்புகளுக்கு ஆளாகியுள்ளனர்

## க்ளோனிங் முறையில் உருவான 6 நாய்கள் பெய்ஜிங் காவல்துறையினரின் சேவையில்

சீனாவில் க்ளோனிங் முறையில் உருவாக்கப்பட்ட 6 நாய்கள், பெய்ஜிங் நகர காவல்துறை பணியில் சேர்க்கப்பட்டுள்ளன.

காவல்துறையினரின் பணிக்கு சிறப்பாக உதவிய 2 நாய்களின் தோல் மாதிரியை சேகரித்து, அவற்றின் மூலம் க்ளோனிங் முறையால் 6 குட்டிகள் உருவாக்கப்பட்டன.

கடந்த ஓகஸ்ட் மாதம் பிறந்த அவற்றுக்கு சிறப்பு கவனம் கொடுத்து பராமரித்து, காவல்துறை அதிகாரி மா ஜின்லாய் என்பவர் பயிற்சி அளித்தார். அந்த 6 நாய்களும் பெய்ஜிங் காவல் துறை பணியில் தற்போது சேர்க்கப்பட்டன.

பெய்ஜிங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அதிகாரிகள் முன்னிலையில் 6 நாய்களும் சேர்த்து கொள்ளப்பட்டன.




## அமெரிக்காவின் ஆளில்லா விமானம் லிபியாவில் சுட்டு வீழ்த்தப்பட்டதாம்!



வொஷிங்டன்,நவ.25

லிபியாவில் அமெரிக்காவின் ஆளில்லா விமானம் ஒன்று சுட்டுவீழ்த்தப்பட்டது.

எண்ணெய் வளமிக்க லிபியாவில் நீண்ட காலம் ஆட்சிகட்டிலில் இருந்த கடாபி 2011ஆம் ஆண்டு அதிகாரத்தில் இருந்து வீழ்த்தப்பட்டமை முதல் அங்கு அரசியல் குழப்பம் நிலவி வருகிறது.

2015 ஆம் ஆண்டு முதல் லிபியா இரண்டாகப் பிளவுபட்டு இரு அரசுகளை கொண்டுள்ளது.

தலைநகர் திரிபோலியில் ஓர் அரசும், நாட்டின் கிழக்கு பகுதியில் மற்றொரு அரசும் இயங்கி வருகின்றன. அங்கு தீவிரவாதிகளின் பிரசன்னம் அதிகம் உண்டு.

கிழக்கு பகுதியில் உள்ள அரசு, திரிபோலியைக் கைப்பற்ற கடந்த ஏப்ரல் மாதம் முதல் முயற்சித்து வருகிறது. அங்கு கடந்த புதன்கிழமையன்று, கிழக்கு பகுதி அரசால் இத்தாலியின் ஆளில்லா விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

இதற்கிடையே லிபியாவில் பாதுகாப்பு ஏற்பாடுகளையும், தீவிரவாதிகளை கண்காணிக்கும் பணியிலும் அமெரிக்காவின் ஆளில்லா விமானம் ஒன்று ஈடுபட்டிருந்தது.

இந்த ஆளில்லா விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டு உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. தாங்கள் ஆளில்லா விமானத்தை இழந்துள்ளனர் என அமெரிக்க இராணுவத்தினர் அறிவித்துள்ளனர். ஆனால் அந்த விமானத்துக்கு நேர்ந்த கதி பற்றியோ, அதன் பின் னணி குறித்தோ அமெரிக்கி இராணுவம் வாய் திறக்கவில்லை.

## கென்யாவில் மழையால் வெள்ளம் நிலச்சரிவில் சிக்கி 34 பேர் சாவு!

நைரோபி,நவ.25

கிழக்கு ஆப்பிரிக்க நாடான கென்யாவில் கடந்த சில நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இந்த மழையால் பல்வேறு மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளன.

தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 34 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வெள்ளிக்கிழமை இரவு முழுவதும் கொட்டித் தீர்த்த பலத்த மழையால் டக்மால் என்ற கிராமத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் மட்டும் 17 பேர் புதையுண்டனர். மேலும், பல்வேறு கிராமங்களில் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி மேலும் 17 பேர் உயிரிழந்தனர். வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன – என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கிளார்மவுண்ட் ஹோட்டல் பயங்கர தீயில் நாசம்



ஈஸ்ட்போர்ன்,நவ.25

இங்கிலாந்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஹோட்டலில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் அந்த ஹோட்டல் நசமானது. அச்சமயம் ஹோட்டலில் இருந்த நூறுக்கும் மேற்பட்டவர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

கிழக்கு சசெக்ஸில் உள்ள ஈஸ்ட்போர்ன் நகரில் பழமையான கிளார்மவுண்ட் ஹோட்டல் செயல்பட்டு வருகிறது. இங்கு நேற்று முந்தினம் மின்கசிவு காரணமாக தீப்பிடித்தது. கடற்கரைக்கு மிக அருகில் இந்த ஹோட்டல் இருப்பதால் கடல் காற்றின் வேகத்தில் தீ வேகமாகப் பரவியது.


15க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களில் வந்த 60க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் பல மணி நேரம் போராடி தீயைக் கட்டுக் குள் கொண்டு வந்தனர்.

முன்னதாக தீ விபத்து ஏற்பட்ட சில நிமிடங்களுக்குள் கிளார்மவுண்ட் ஹோட்டலில் இருந்த 100க்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் அவசரமாக வெளியேற்றப்பட்டமையால் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். இருப்பினும் 7 பேருக்கு லேசான காயங்கள் ஏற்பட்டன.

## 98 வயதிலும் கூட மக்களுக்கு மருத்துவம் பார்க்கும் டாக்டர்

பிரான்ஸ் நாட்டில் 98 வயதிலும் மருத்துவர் ஒருவர் மக்களுக்கு மருத்துவ சேவை செய்து வருகிறார்.

அந்நாட்டின் மேற்கு பகுதியை சேர்ந்த அவரின் பெயர் கிறிஸ்டியன் செனேய். 1951 ஆம் ஆண்டில் முதன்முதலாக மருத்துவம் பார்க்க தொடங்கிய அவர், பாரிஸ் புறநகர் பகுதியில் மருத்துவமனை திறந்து வாரத்துக்கு 2 நாள்கள் காலையில் சிகிச்சை அளித்து வருகிறார்.



கிறிஸ்டியனின் மகனும் மருத்துவர்தான். அவர் ஓய்வு பெற்று விட்ட நிலையில், கிறிஸ்டியன் மட்டும் மருத்துவசேவை அளித்துவருகிறார். பாரிஸ் புறநகர் மக்களும், அவரிடம் மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## சிகிச்சைக்காக லண்டன் சென்ற ஷெரீப்பின் சுகவீனம் குறித்து பாக். பிரதமர் சந்தேகம்

இஸ்லாமாபாத்,நவ.25

லண்டனுக்குச் சிகிச்சைக்காக சென்ற பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் உடல்நிலை குறித்து பிரதமர் இம்ரான்கான் சந்தேகம் எழுப்பி உள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் (வயது 70). இவர் ஊழல் வழக்கில் 7 ஆண்டு தண்டனை விதிக்கப்பட்டு, லாகூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவரது உடல்நிலை மோசம் அடைந்ததாக தகவல்கள் வெளியாகின. உடல்நிலையைக் காரணம் காட்டி அவருக்கு நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியது.

வீட்டில் இருந்து அவர் சிகிச்சை பெற்ற நிலையில், உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால், அவர் லண்டனில் சிகிச்சை பெற வேண்டும் என்று டாக்டர்கள் ஆலோசனை கூறினர்.

அதைத் தொடர்ந்து அவர் லண்டன் செல்ல வேண்டுமானால், ரூ.700 கோடிக்கான உறுதிமொழி பத்திரத்தை தாக்கல் செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட சில



நிபந்தனைகளை பிரதமர் இம்ரான்கான் அரசு விதித்தது. அதனை ஏற்க மறுத்த நவாஸ் ஷெரீப், லாகூர் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

அதை விசாரித்த நீதிபதிகள், நவாஸ் ஷெரீப்பின் பெயரை வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டவர்களின் பட்டியலில் இருந்து நிபந்தனை இன்றி நீக்க அரசுக்கு உத்தரவிட்டனர். அதன்படி தடைப் பட்டியலில் இருந்து நவாஸ் ஷெரீப் பெயர் நீக்கப்பட்டு, அவர் கடந்த செவ்வாய்க்கிழமையன்று அம்புலன்ஸ் விமானத்தில் லண்டன் சென்றார்.

அங்குள்ள தனியார் மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்த நிலையில் நவாஸ் ஷெரீப் உடல்நிலை குறித்த மருத்துவ பரிசோதனை அறிக்கை மீது பிரதமர் இம்ரான்கான் சந்தேகம் கிளப்பி உள்ளார்.

வெள்ளியன்று தனது சொந்த ஊரான மியான்வாலியில் நடந்த நிகழ்ச்சியில் இம்ரான்கான் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறும்போது, நவாஸ் ஷெரீப்புக்கு 15 நோய்கள் இருப்பதாக மருத்துவ பரிசோதனை அறிக்கை கூறுகிறது. அதிலும் குறிப்பாக இதயத்தில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் லண்டன் செல்வதற்காக விமானத்தில் ஏறிய விதத்தை பார்த்தபோது எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. அவரது மருத்துவ பரிசோதனை அறிக்கையை மீண்டும் பார்த்தேன். அவருக்கு இதயத்தில் பிரச்சினை உள்ளது, சிறுநீரகங்கள் சரியாக வேலை செய்யவில்லை, அவருக்கு நீரிழிவு பாதிப்பு உள்ளது என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது என்றார்.

ஆனால், நவாஸ் ஷெரீப் உடல்நிலை குறித்த மருத்துவ அறிக்கையின் மீது இம்ரான்கான் சந்தேகம் எழுப்பி இருப்பதற்கு நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி கண்டனம் தெரிவித்து உள்ளது.

இந்த வெறுப்புணர்வு பேச்சுக்காக இம்ரான்கான் மீது வழக்கு போட வேண்டும் என்று கூறி உள்ளது.

மேலும், அந்த கட்சியின் பொதுச்செயலாளர் அசன் இக்பால் கருத்து தெரிவிக்கையில், இம்ரான்கான் நிறுவிய சவுக்கத் புற்றுநோய் மருத்துவமனை மற்றும் பஞ்சாப் சுகாதார அமைச்சர் யாஸ்மின் ரஷீத் மேற்பார்வையில் இயங்கும் அரசு மருத்துவமனை ஆகியவற்றில் நடத்தப்பட்ட பரிசோதனை முடிவுகள் மீது கூட சந்தேகம் எழுப்பியவர் இம்ரான்கான் எனக் கூறினார்.

# சமூகத்தில் பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் பாதுகாப்பான சூழலை உருவாக்குவோம்!

**சர்வதேச பெண்களுக் கெதிரான வன்முறை ஒழிப்பு தினம் இன்றாகும். இன்று முதல் டிசெம்பர் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம் வரையான 16 நாள்களும் பால் முறை வன்முறைக்கு எதிரான நாள்களாக அனுஷ்டிக்கப் படுகின்றன. அதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுர மாகின்றது.**

**கீர்த்தனா ஜெயரட்ணம்**
**(யாழ். சமூக செயற்பாட்டு மையம்)**

உலக கடிகாரம் வேகமாகச் சுழன்று கொண்டிருக்கையில், அதற்கு ஈடு கொடுக்குமளவு நாமும் ஓடிக் கொண்டிருக்கின்றோம். மனிதராகப் பிறந்து இயந்திரமாக ஓடிக் கொண்டிருப்பதில், நாம் தாய் வழி சமூகத்தின் தோன்றல் என்பதை மறந்துவிட்டோமா எனும் கேள்வி எழுகின்றது. காரணம் தினமும் நாம் கேள்வியுறும் மற்றும் எதிர்கொள்ளும் விடயங்கள் அவ்வாறு அமைந்துள்ளன.

எம் அனைவரினதும் வாழ்க்கை நகர்வு முதலில் எமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதாகவே அமைகின்றது. அவ்வாறு இருக்கையில் பாதுகாப்பு என்பது அன்று தொட்டு இன்றுவரை கேள்விக்குறியாக இருக்கின்றது. உலகளவில் பெண்களது பாதுகாப்பு வேண்டி ஒரு நாள் ஆண்டுதோறும் பிரகடனப்படுத்தப்படுகின்றது என்றால், அங்கே இன்னமும் அந்த பாதுகாப்பு கிடைக்கவில்லை என்பதே அர்த்தமாகும்.

கார்த்திகை 25 (சர்வதேச பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு தினம்) தொடக்கம் மார்கழி 10 (சர்வதேச மனித உரிமைகள் தினம்) வரை பால்நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள்கள் எனும் பிரச்சார நிகழ்வு சர்தேச ரீதியாக பிரகடனப்படுத்தப்பட்டு வருகின்றது.

1960 காலப்பகுதியில் டொமினிகன் குடியரசில் மூன்று சகோதரிகள் அரசியலில் ஈடுபாடுடையவர்களாக இருந்தனர். மிரபல் சகோதரிகள் டொமினிகன் குடியரசின் சர்வாதிகாரத்திற்கு எதிராக இரகசியப் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக மிகவும் மோசமான முறையில் கொலை செய்யப்பட்ட நாளே கார்த்திகை 25 ஆகும். அன்று நடந்த அவ்வன்முறைக்கு எதிராக சில நாடுகள் தமது குரலெழுப்பியதன் விளைவாக 1999 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையானது மிரபல் சகோதரிகளை நினைவுகூரும் முகமாக கராத்திகை 25 ஆம் திகதியை சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினமாக பிரகடனப்படுத்தியது. அன்றிலிருந்து இன்றுவரை உலக நாடுகள் இத்தினத்தினை பெண்களுக்கெதிரான பால்நிலை அடிப்படையிலான வன்முறை ஒழிப்பு தினமாகத் தாமும் பிரகடனப்படுத்தி வருகின்றன.

ஆண்டு தோறும் ஒவ்வொரு தொனிப்பொருளில் இப்பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வருடம் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் சுதந்திரமானதும் பாதுகாப்பானதுமான சூழலை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளில் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

பொதுவாக எம்மில் பலருக்கு, ஏன் அன்று தொட்டு இன்று வரை அனைவரும் பெண்களின் பாதுகாப்பு, பெண்களுக்கெதிரான வன்முறைகள் பற்றியே பேசிக்கொண்டிருக்கின்றார்கள், ஏன் ஆண்களை பற்றி பேசுவதில்லை என்ற கேள்வி எழுவது யதார்த்தம்.

பிறப்பால் நாம் ஆண், பெண் என்று பாகுபடுத்தப்பட்டுள்ளோம். ஆனால் சமூகமானது பல்வேறு வரையறைகளின் கீழ் ஆண்களையும், பெண்களையும் பாகுபடுத்துகின்றது. இப்பாகுபடுத்தலானது ஆண், பெண் இருபாலாரிலும் ஏதோ ஒரு வகையில் செல்வாக்குச் செலுத்துகின்ற போதிலும் அதிகம் பாதிக்கப்படுபவர்களாக பெண்களே காணப்படுகின்றனர். எனவேதான் பாதிக்கப்படும் சமூகத்திற்காக குரலெழுப்ப வேண்டியுள்ளது.

பெண் குழந்தைகளை கருவிலேயே அழிக்கும் காலத்திலிருந்து மீண்டு வந்துவிட்டோம் என்று திருப்தி கொள்ள தொடங்க வேறு பல பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளமை மீண்டும் அக்காலத்தை நினைவு படுத்துகின்றது.

எமது சிறுமிகள் வீட்டில், பாடசாலையில், தாம் வசிக்கும் சூழலில் பல்வேறு விதமான வன்முறைச் சம்பவங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அவர்கள் வசிக்கும் இன்றைய சூழலானது, பெண் பிள்ளைகளை, ஏன் பெண்ணாகப் பிறந்தோம் என்றும், பெற்றோரை, ஏன் பெண் பிள்ளைகளை பெற்றெடுத்தோம் என்றும் சிந்திக்க வைத்து விட்டது. வீட்டில் தந்தை மதுவுக்கு அடிமையாகியிருப்பின் அப்பிள்ளை தந்தையால் வார்த்தைகளாலோ,



உடலியல் ரீதியாகவோ துன்புறுத்தலுக்குள்ளாகின்றது, சிறுவர்கள் தந்தையாலோ வேறு உறவினர்களாலோ அல்லது வேறு நபர்களாலோ பாலியல் வன்முறைக்குள்ளாகும் சந்தர்ப்பங்கள் கூட அதிகமாக எமது பிரதேசங்களில் அதிகரித்து வருகின்றன. அவ்வாறு இல்லாது விட்டால் பெற்றோரது அலட்சியப்போக்கானது சிறுமிகள் வன்முறைக்குள்ளாக காரணமாகின்றது. வீட்டில் பெற்றோர் வேலைக்கு செல்லும் போது சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் வீட்டில் இருக்கின்ற நிலையும், வறுமை காரணமாக வேலைக்குச் செல்லும் நிலையும், அங்கு பிள்ளைகள் வன்முறை உள்ளாகுதலும் சிறுவர்களுக்கெதிராக எமது பிரதேசங்களில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.



ஒருவருக்குப் பாதுகாப்பையும் சுதந்திரத்தையும் வழங்கும் அடிப்படைச்சூழலாக அமைவது வீடு. ஆனால் இன்று பல வீடுகளில் அந்நிலை அற்றுப் போகின்றது. குறிப்பாக பெண்கள் அதிகம் வன்முறைக்குள்ளாக்கப்படும் தளமாக வீட்டுச் சூழல் மாறியுள்ளது. வீட்டிற்குள் பெண்ணைப் பூட்டி வைத்து என்னவென்றாலும் செய்து விடலாம், கேள்வி கேட்பதற்கு எவரும் வந்து விட முடியாது என்னும் துணிவில் பலர் வீட்டில் வைத்து பெண்களைத் துன்புறுத்தி வருகின்றனர். வீட்டில்



தொடங்கும் இந்த வன்முறையானது உடலியல் ரீதியாக மட்டுமன்றி உள ரீதியாகவும் பாதிப்பினை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

வீட்டுச் சூழல் மட்டுமல்ல பெண்கள் பணிபுரியும் இடங்கள் கூட வன்முறைத்தளங்களாக மாறியுள்ளன. வேலைக்குச் செல்லும் பெண்கள் உயர் அதிகாரிகளால் அல்லது சக பணியாளர்களால் வன்முறைக்குட்படுத்தப்பட்ட சம்பவங்களை அறிந்திருப்போம். அவ்வாறு இருக்கையில், தற்பொழுது எமது தமிழ் பேசும் பிரதேசங்களில் தொற்றுநோய் போல பரவி வருகின்றது நுண்கடன் திட்டம். மக்களது நலனுக்காகவும் அவர்களது வாழ்வாதாரம் மேம்பட வேண்டும் எனும் நோக்கில் வழங்கப்படும் நுண்கடன் திட்டமானது குறித்த தவணைக்குள் பணத்தைச் செலுத்த தவறுமிடத்து ஏற்படும் பிரச்சினைகளை பெண்கள் அதிகம் எதி ர்கொள்கின்றார்கள். இச்சந்தர்ப்பமானது சில இடங்களில் பாலியல் தொல்லைகளாகவும் மாறியுள்ளது.

வீடு, பணிபுரியும் இடங்கள் என்பவற்றை தாண்டி பொது இடங்களிலும் பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகமாகத்தான் உள்ளன. ஒரு சிறுபிள்ளை அருகிலுள்ள பாடசாலைக்கு கூட தனியே செல்ல முடியாத சூழ்நிலைக்கு நாம் தள்ளப்பட்டு விட்டோம். அருவருக்கத்தக்க செயற்பாடுகளினாலும், வார்த்தைப் பிரயோகங்களாலும், பாலியல் தொல்லைகளாலும் எமது பிரதேசங்களில் பல சிறுவர்கள் தமது கல்வியை இடைநிறுத்தி பாடசாலைக்குச் செல்லாமல் வீட்டில் இருக்கின்றனர்.

வீதியால் இரவில் செல்ல முடியாத ஒரு சூழ்நிலையை நாம் முன்னர் ஒரு காலகட்டத்தில் அனுபவித்திருந்தோம், ஆனால் தற்போது பகலிலே கூட செல்ல முடியாத நிலைக்கு வந்து விட்டோம். துப்பாக்கி தோட்டாக்களிற்கு அஞ்சி ஓடியிருந்தோம் அது ஆயுதப்போராட்ட காலம். இன்று வீதியால் செல்லும் போது ஏற்படுத்தப்படும் பாலியல் தொல்லைகளாலும், ஆபாச வார்த்தை பிரயோகங்களாலும், கடத்தல், கொலை மிரட்டல், பாலியல் துஷ்பிரயோகம் போன்றவற்றாலும் கூட அஞ்சி ஓட வேண்டியுள்ளது. சுதந்திர நாட்டில் ஆயுதப் போராட்டம் மட்டுமே முடிவடைந்துள்ளது. பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கெதிரான போராட்டம் இன்னமும் முடிவடையவில்லை.

ஒரு புள்ளியின் தொடக்கம் பல புள்ளிகளை இணைத்து முழுமையான ஒரு கோலத்தை உருவாக்கும் வலிமை கொண்டது. அதுபோல பிறர் திருந்தட்டும் என்று காலம் காலமாக பார்த்துக் கொண்டிருப்பதை விட்டு எம்மிலிருந்து மாற்றத்தை உருவாக்க முன்வர வேண்டும். வன்முறைகள் ஒவ்வொன்றின் பின்னும் பாதிக்கப்படுபவர், பாதிப்பை ஏற்படுத்துபவர் என்ற இருவர் உண்டு. இங்கு பாதிக்கப்படுபவர் தன்னை முதலில் பாதுகாக்கத் தெரிந்திருத்தல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில் எம்மை நாமே பாதுகாத்துக்கொள்வது கடினமாக இருப்பினும் முடிந்தவரை எமது சுய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளத் தெரிந்திருத்தல் வேண்டும்.

(9 ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர்
Kalaikathir



# ஜனாதிபதி தேர்தலும் முஸ்லிம் சமூகமும்

மொட்டு அணியின் வெற்றியானது ஏதோ முஸ் லிம் சமூகத்தின் தோல்வி என்கின்ற அருட்டலான மாயையை உருவாக்கி அதனை நிறுவ சில மொட்டு அபிமானிகளும் மொட்டு அணியின் முகவர்களான அதாவுல்லாஹ், ஹிஸ்புல் லாஹ், பஷீர் சேகுதாவூத், ஹசன் அலி ஆகியோரும் அவர்களின் எடுபிடிகளும் முயற்சி செய்து வருகிறார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் ரிஷாத் பதியுதீன் ஆகியோரின் பிழையான தீர்மானமே இதற்குக் காரணம் என்கின்ற பரப்புரைகளை செய்வதில் இவர்கள் பிரயத்தனம் எடுக்கின்றனர்.

முஸ்லிம் சமூகத்தின் தலைவர்களாக ஹக்கீம் தலைமையில் ரிஷா அணியினர் உட்பட ஒட்டுமொத்த ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து அண்மை காலத்தில் ஏற்பட்ட சிக்கலான நிலையிலிருந்து இந்தச் சமூகத்தை சமயோசிதமாக காப்பாற்றிய போது இவர்களை ஒஹோ என்று போற்றிப் புகழ்ந்த அதே நரிகள்தான் இப்போது இந்தத் தலைமைகளை விமர்சிக்கின்றனர்.

அடித்தவன் காலில் விழுவதனால் மீண்டும் அடிவிழாது என்ற சரணாகதிப் புத்தியை சிலர் தமது சொந்த இலாபத்திற்காகக் கையாள்வது மிகத்தெளிவான உண்மையாகும். மக்கள் மன்றத்தில் புறக்கணிக்கப்பட்டு, அதிகாரமிழந்து, அரசியல் அநாதைகளாக வலம் வரும்



இந்தப் பிரகிருதிகள் தாங்கள்தான் முஸ்லிம் சமூகத்தின் ஏக முகவர்கள் என்று கட்டமைத்துக் காட்ட முயற்சித்து படுதோல்வி அடைந்துள்ளார்கள்.

இப்போது தேசியப்பட்டியல் கிடைக்காதா அல்லது ஆளுநர் பதவி கிடைக்காதா அல்லது நிறுவனத் தலைமை கிடைக்காதா அல்லது இடையில் ஏதாவதொன்று கிடைக்காதா என்று தூதுவிட்டும் நேரடியாக கேட்டும் ஒன்றும் கிடைக்காத கையறு நிலையில் எப்படியும் ஏதாவது ஒன்று கிடைக்கும் என்கின்ற கடைசி சொட்டு நம்பிக்கையோடு விட்டத்தை பார்த்து கொட்டாவி விடுகின்றனர்.

அவசரப் புத்தியில் அடிப்படை விளங்காமல் ஹக்கீம் – ரிஷாத் அமைச்சுப் பதவியை துறக்க வேண்டும் என கோமிட்டார்கள் சில எடுபிடிகள்.

ஓர் அமைச்சரவையின் பிரதமர் தனது பதவியை இராஜினாமாச் செய்யும் போது அவருக்கு கீழே உள்ள அனைத்து அமைச்சுகளினதும் அமைச்சர்களினதும் பதவி தானாக இல்லாமலாகிவிடும். எனவே தோல்வியை ஒப்புக்கொண்ட தரப்பின் பிரதானி கூட்டாக இந்த இராஜினாமாவை மேற்கொள்வார். அதுதான் நடந்தது. இதற்கிடையில் சிலர் முன்னரே தமது பதவிகளை இராஜினாமா செய்தனர். அது அவர்களது தனிப்பட்ட விருப்பமாகும். எனவே எதற்கெடுத்தாலும் கொதிநிலையில் இயங்கும் விமர்சகர்கள் கொஞ்சம் நிதானமாகச் செயற்பட வேண்டும்.

புதிய ஜனாதிபதி இந்த நாட்டின் எல்லா இனமக்களுக்குமான ஜனாதிபதி. அவருக்கு வாக்களித்தவனுக்கும், வாக்களிக்காதவனுக்கும் அவர்தான் ஜனாதிபதி.

இந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ். முஸ்லிம் சமூகத்தினர் தத்தமது தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். தமக்கான ஜனநாயக உரிமையைக் கச்சிதமாகக் கையாண்டு உள்ளனர். அது இன்றைய ஆளும் தரப்புக்கு மிகத்தெளிவான செய்தியினைச் சொல்லியுள்ளது. அதுதான் சிறுபான்மை சமூகம் உங்களை நம்பவில்லை என்ற அழுத்தமான செய்தியாகும். இனவாதப் பரப்புரைகளை கொண்டு ஆட்சி பீடம் கைப்பற்றப்பட் டாலும், ஆட்சியைக் காப்பாற்ற இதே இனவாத செயற் பாட்டை ஆளும்தரப்பால் தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியாது. இதனை ஆளும் தரப்பின் முக்கிய புள்ளிகள் அறிவார்கள்.

அத்தோடுசிறுபான்மைச் சமூகத்திற்கும்மொட்டுஅணியினருக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கின்ற விடயத் தில் அவதானம் செலுத்துவார்களே தவிர, மக்கள் செல்வாக் கற்ற – தோற்றுப்போன – பிரமுகர்களில் அவர்கள் ஒருபோதும் தங்கியிருக்க மாட்டார்கள்.

ஆயிரம் விமர்சித்தாலும் ஹக்கீம் – ரிஷாத் இருவரும் மக்கள் மன்றத்தில் செல்வாக்கும், சொல்வாக்கும் மிக்கவர்கள். அவர்களின் தீர்மானம் பெரும்பான்மைச் சமூகத்தின் தீர்மானத்திற்குச் சமாந்திரமானதாக இருக்க வேண்டும் என்ற பொதுப்புத்தியிலிருந்து நாம் விலகியே சிந்திக்க வேண்டும்.

காரணம், தேசிய அரசியலின் போக்கிலிருந்து மாறுபட்ட பிரச்சினைகளும், தேவைப்பாடுகளும் நமக்கிருக்கின்றன. அவற்றைச் சுற்றிய சிந்தைக்கூடான தீர்மானமாகவே இவர்களது தீர்மானம் இருக்கும்.

ஆனால் எவ்வளவு அடித்தாலும் அடிமை போல ஒட்டிக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை முன்மொழிகின்ற சிலர் கிடைத்த இடைவெளியில் நாமும் உள்ளே நுழைந்து அரசியலில் ஒரு சுற்று வரலாம் என்ற நப்பாசையில் ஹக்கீம் – ரிஷாத் தரப்பினை விமர்சனம் செய்கின்றனர். இவர்கள் வெறும் நெத்தலிகள். சல்லிக் காசுக்கு பெறுமானமற்ற, ஒரு நூறு வாக்குகளையாவது திரட்டிக்கொள்ள முடியாத பாவப்பட்ட ஜீவன்கள். புதிய ஜனாதிபதியோ, பிரதமரோ இவர்களைக் கண்டு கொள்ளவில்லை என்பது இவர்களது புலம்பல்கள் புலப்படுத்துகின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஒரு வார கால நடவடிக்கைகளை நோக்கும் போது மிகநீண்ட தொலை தூர பயணமொன்றுக்கான அடித் தளத்தை மிக அவதானமாக, நிதானமாக அவர் இடுவது புரிகிறது.

இறைவன் நாடினால் இனவாதமற்ற, மதவாமற்ற ஒரு சமாதான இலங்கையை அவரால் உருவாக்க முடியும். அப்படி நடக்கின்ற போது மூன்று இனமக்களையும் சமமாக நடத்துகின்ற ஒரு நிலை உருவாகலாம். அவரது எதிர்கால செயற்பாடுகள் அதனை நமக்கு உணர்த்தும்.

சகல சமூகங்களையும் அரவணைத்து, முன்னர் விட்ட பிழைகளைத் திருத்திய ஒரு ஆட்சியை சிறுபான்மையினரும் பெரிதும் விரும்புவர். இதன்போது மக்கள் மன்றத்தில் தோற்றுப்போன சில்லறைகளின் சலசலப்பு எடுபடாது.மாறாக முஸ்லிம் சமூகம் ஏற்றுக்கொண்ட ஹக்கீமும் – ரிஷாத்துக் அங்கே வீற்றிருப்பார்கள். அப்போதும் இப்போது போலவே தோற்றுப்போனவர்களின் அவலக்குரல் எழத்தான் செய்யும்.

அத்தோடு ஹக்கீமையும் – ரிஷாத்தையும் விமர்சிக்கின்ற நபர்களை அல்லது அவர்களது பின்புலத்தை நோக்கினால் அங்கே சமூகத்தினால் நிராகரிக்கப்பட்டவர்களை நாம் இனங்காணலலாம். இவர்களது நோக்கம் ஹக்கீமை விமர்சிப்பதன் மூலம் எதிரணியினரிடம் நல்ல பெயரையும் இன்னும் ஏதாவது ஒன்றையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதாகும்.

ஆனால் இந்த தோற்றுப்போனவர்கள் செல்லாக் காசுகள் என்று ஆளும் தரப்பு தெளிவாக தெரிந்து வைத்துள்ளது. அதுதான் நேற்று வந்த முஸம்மில் ஹாஜியாருக்கு ஆளுநர் பதவி கொடுத்த போதும் இவர்கள் கண்டு கொள்ளப்படவில்லை.

தமிழ் – முஸ்லிம் அரசியல், இன்னொரு தளமான முனையை நோக்கி நகர்ந்துள்ளது. அதனைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டியது இந்தத்தலைமைகளின் கடமையாகும். வலுவான ஒரு எதிர்கட்சியை அமைப்பதில் இவ்விரு சமூகத்தையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிதும் முக்கிய பொறுப்பாகும். அடுத்து வரும் ஐந்தாண்டுகளில் எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தை விமர்சிக்கின்ற மாமூலான அரசியல் நிகழ்ச்சி நிரலில் இருந்து விடுபட்டு அரசின் நல்ல திட்டங்களுக்கும், மக்கள் நலப்பணிக்கும் பூரண ஆதரவை வழங்க வேண்டும்.

எதிர்க்கட்சி அரசியலின் மூலம் சிறுபான்மை சமூகத்துக்கு எதிரான செயற்பாடுகளை நெஞ்சுரத்துடன் தடுப்பதோடு, தமிழ் முஸ்லிம் சமூகத்தினுள் ஊடுறுவி காணப்படும் முரண்பாடுகளை களைவதற்கு இந்த கால அவகாசத்தை பயன்படுத்த வேண்டும். நம்பிக்கையோடு இருப்போம்.

**நாளை நமதே!**

நாச்சியாதீவு பர்வீன்.

## சமூகத்தில் பெண்களுக்கும்...



(8 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பாடசாலைகளில் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களின் போது வேண்டாம் என்று சொல், இல்லாவிட்டால் குரலெழுப்பு, இல்லாவிட்டால் அவ்விடத்தை விட்டு ஓடு என்று சொல்லிக்கொடுக்கப்பட்டிருக்கும் அது சிறுவர்களுக்குமட்டுமல்ல, அனைவருக்கும் பொருத்தமான ஒன்று.

வன்முறை சம்பங்களின் போது முடிந்தவரை அதிலிருந்து தப்பிக்க முயற்சி எடுக்க வேண்டும். எம்மில் பலர் சமூகத்தவர் பற்றி எண்ணி தமக்கு நடந்த வன்முறையினை முறையிடுவதற்கு தயங்குவதுண்டு. அதனாலேயே மீண்டும் மீண்டும் அச்செயல்கள் இடம்பெறுகின்றன என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு வன்செயல் இடம் பெறும் போது எனக்கு இடம்பெறவில்லை, எனது பிள்ளைக்கு இடம்பெறவில்லை என்ற அலட்சியப்போக்கே நாளை அது எம் பக் கம் திரும்பக் காரணமாகின்றது.

வன்முறைச்செயல்களில் ஈடுபடுபவர்கள் வேற்றுக்கிரகங்களில் இருந்து இங்கு வந்தவர்களல்லர். எம்மோடு உடன் பிறந்தவர்கள், எம்மோடு கூட வாழ்பவர்கள், எம் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகளை வளர்க்கும்போது அவள் பெண், அவளை இப்படி நடத்தினாலும் பரவாயில்லை, நீ ஆண் எப்படியும் இருக்கலாம் என்று சொல்லி வழிகாட்டதீர்கள், நல்ல பழக்க வழக்கங்களை சொல்லி வழிகாட்ட வேண்டும். ஆணோ பெண்ணோ எவரையும் துன்புறுத்தாது வாழும் வாழ்க்கையை வழிகாட்ட வேண்டும். அனைவருக்கும் எமது நாட்டில் சுதந்திரமாகவும் சந்தோசமாகவும் வாழ உரிமை உண்டு என்பதைத் தெரியப்படுத்த வேண்டும்.

பெண்களதும் சிறுவர்களதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துபவர்களாகவும் பாதுகாப்பு வழங்குபவர்களாகவும் இந்தச் சமூகத்தில்வர்க வளர வழிகாட்ட வேண்டும்.

வன்முறைக்கெதிரான சட்டங்களும் தண்டணைகளும் பதிவு செய்யப்படும் அல்லது முறைப்பாடு செய்யப்படும் குற்றங்களுக்கு மட்டுமே. ஆனால் பதிவு செய்யப்படாமலும், தெரியப்படுத்தப் படாமலும், வெளிப்படுத்தப்படாமலும் பல வன்முறைச் சம்பவங்கள் வீட்டிலும், வேலைத்தளங்களிலும், பொது இடங்களிலும் இடம்பெற்றும், இடம்பெற்றுக் கொண்டும் இருக்கின்றன.

விழிப்படைய வேண்டிய நேரமிது. எனக்கு நடக்கும் வரை காத்திருப்பதை விடுத்து, பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான வன்முறைச் சம்பவங்கள் உருவாகாத வகையில் பாதுகாப்புடைய சூழலை உருவாக்க அனைவரும் முன்வர வேண்டும். சட்டங்களும் தண்டனைகளும் இனி உருவாகவிருக்கும் குற்றவாளிகளின்எண்ணிக்கையைக்குறைக்குமளவு வலிமையுடையன்வாக அமைய வேண்டும். எதிர்காலத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் இடம் பெறாத ஒரு சமூகத்தை உருவாக்க இன்றிலிருந்து ஒன்றிணைவோம். *






# சஞ்சு சாம்சனின் மறைமுக ட்வீட்

மேற்கு இந்திய அணிகளுக்கு எதிராக உள்நாட்டு ரி - 20 மற்றும் ஒருநாள் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ரோஹித் சர்மாவுக்கு ஓய்வு அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவர் ரி 20 மற்றும் ஒருநாள் தொடரில் இடம் பெற்றுள்ளார்.

மேலும், கடந்த சில போட்டிகளில் தொடர்ந்து மோசமாக விளையாடி வரும் ஷிகர் தவான் மற்றும் ரிஷப் பந்த் ஆகிய இருவருக்கும் மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த போட்டிகளில் அணியில் இடம்பெற்றிருந்தும் ஒரு போட்டியில் கூட வாய்ப்பளிக்காத நிலையில் சஞ்சு சாம்சன் ஒதுக்கப்பட்டுள்ளார். இதனால் ஏற்பட்ட அதிருப்தியை சஞ்சு சாம்சன் தனது ட்விட்டர் பக்கத்திலும் வெளிப்படுத்தினார்.

அணியில் இடம்பெறாத ஏமாற்றத்தை சஞ்சு சாம்சன் வார்த்தைகளால் விவரிக்கவில்லை. அதற்கு மாறாக புன்னகைக்கும் ஸ்மைலியை தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டார்.

இதனைத் தொடர்ந்து சஞ்சு சாம்சனின் ட்வீட்டின் உள் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் பலர் அவர் பதிவுக்குக் கீழே, ”தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்”, ”நம்பிக்கையுடன் இருங்கள் சஞ்சு சாம்சன். நீங்கள் அணியில் நிச்சயம் இடம் பெறுவீர்கள்” என்று அவருக்கு ஆதரவான பதிவுகளைப் பதிவிட்டனர்.

மேலும், இந்திய அணியின் தேர்வுக் குழுவையும் நெட்டிசன்கள் கடுமையாக விமர்சித்தனர்.

# பதவி விலகிய அடுத்த நாள் ஹரீன் பெர்னாண்டோ வீராங்கனைக்காக வைத்த கையெழுத்தால் சர்ச்சை!

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்குத் தேர்வு செய்யப்படாத குறுந்தூர ஓட்ட வீராங்கனை ஒருவர் இறுதிநேர சிபார்சின் பேரில் அணிக்குள் இணைக்கப்பட்டுள்ளமை சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது. தெரிவுக்குழுவினர் இதற்கும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

நேபாளத் தலைநகர் காத்மாண்டுவில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை பதிமூன்றாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன. இதற்காக 27 போட்டிகளில் பங்கேற்க இலங்கையிலிருந்து 600க்கும் அதிகமான வீர, வீராங்கனைகள் செல்கின்றனர்.

தடகள அணி வீரர்கள் மொத்தம் 66 பேர். இவர்களின் பெயர்ப்பட்டியல் நேபாளத்தின் தெற்காசிய விளையாட்டு அமைப்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது. இந்த நிலையில், விளையாட்டு அமைச்சிலிருந்து இன்னொரு வீராங்கனை இணைக்கப்பட்டுள்ளார் என அறிவித்தல் சென்றுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவின் கையெழுத்துடன் அந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பதவி விலகினார் என ஹரீன் பெர்னாண்டோ 19ஆம் திகதி அறிவித்திருந்த நிலையில், 20ஆம் திகதி இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டிருந்தார்.

கேட்வே இன்டர்நஷனல் பாடசாலையின் ஷெலின்டா ஜோன்சன் என்ற வீராங்கனையே அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கு தகுதி பெறுவதற்கான தேர்வு விழாவாக தேசிய சாம்பியன்ஷிப் ஓகஸ்ட் மாதம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பெற்ற விளையாட்டு வீரர்கள் தெற்காசிய விளையாட்டுத் தடகள அணியில் இணைக்கப்பட்டுள்ளனர்.

தகுதிச் சுற்று சமயத்தில் காயமடைந்தார் எனக் குறிப்பிட்டு, நேபாளம் செல்லும் அணியில் தன்னை இணைக்கும் படி ஷெலின்டா விடுத்த கோரிக்கையை தேர்வாளர்கள் நிராகரித்திருந்த நிலையிலேயே, ஹரீன் பெர்னாண் டோவின் தலையீட்டில் தெற்காசிய விளையாட்டு குழாமில் அவர் இணைக்கப்பட்டுள்ளார்.

நடீா ராமநாயக்க, ஷர்மிளா ஜோன் ஆகியோர் தேர்வாளர்களால் தெரிவான வீராங்கனைகளாவர்.



# அஸ்வினிடம் வொஷிங்டன் கற்கவேண்டும்

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான அஸ்வினிடம் இருந்து, இளம் வீரரான வொஷிங்டன் சுந்தர் பந்துவீச்சு முறைகளைக் கற்றுக்கொள்ளவேண்டும் என அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் வேண்டுக்கோள் விடுத்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி அடுத்தமாதம், இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒருநாள் மற்றும் ரி – 20 தொடரில் விளையாடவுள்ளது.

இந்தச் சுற்றுப்பயணத்தின்போது நடைபெறவுள்ள ரி – 20 தொடரில் விளையாடுவதற்கு வொஷிங்டன் சுந்தருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே இந்தியச் செய்தி சேவையொன்றுக்கு வழங்கிய செவ்வியில், அவர் இதனைத்தெரிவித்தார்.



அவர் மேலும் கூறுகையில் –

அஸ்வின் டெஸ்ட் கிரிக்கெட்டில் நன்றாகப் பந்துவீசி வருகிறார். அவர் பந்துகளை நன்குச் சுழலச் செய்வார். பல வகையான பந்து வீச்சு முறைகளைக் கையாள்வார்.

வொஷிங்டன் சுந்தர் இதைக் கற்றுக்கொள்ளவேண்டும். அவர் நன்றாக விளையாடவேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன்.

இளம் வீரர்களை அணிக்குள் சேர்ப்பதை நான் ஆதரிக்கிறேன். ஆனால், அவர்கள் பல உத்திகளைக் கற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் கடுமையான போட்டிக்கு மத்தியில் அவர்கள் நீக்கப்படுவார்கள் – என்றார்.

# எங்களிடம் ஆரோக்கியமான போட்டி



இந்தியவீரர்களிடம்ஆரோக்கியமான போட்டி நிலவுவதாக, பங்களாதேஷுக்கு எதிராக கொல்கத்தாவில் நடந்த பகலிரவு டெஸ்ட் போட்டியில் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்திய இஷாந்த் சர்மா தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் நடந்த பகலிரவு டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 106 ஓட்டங்களில் சுருண்டது. பங்களாதேசுக்கு எதிராக இஷாந்த் சர்மா, உமேஷ் யாதவ், மி ஆகியோர் சிறப்பாகப் பந்து வீசினர்.

இஷாந்த் சர்மா 12 ஓவர்கள் வீசி 4 மெய்டன்கள் எடுத்து 22 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். உமேஷ் யாதவ் 7 ஓவர்கள் 2 மெய்டன்கள் எடுத்து 29 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஷமி 10.3 ஓவர்கள் வீசியதில் 2 மெய்டன்கள் எடுத்து 36 ஓட்டங்கள் கொடுத்து 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்நிலையில் 5 விக்கெட்டுகள் எடுத்தது குறித்து இஷாத் சர்மா கூறும்போது, எங்களிடம் ஆரோக்கியமான போட்டி நிலவுகிறது. போட்டி இருந்தால் தான் அது ஒவ்வொரு பந்து வீச்சாளரையும் ஊக்கப்படுத்தும். இதில் அனைவரும் சிறப்பாக விளையாடும் போது யாரையாவது வெளியே உட்கார வைக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது.

இதற்கு மிகப் பெரிய உதாரணம் அனுமா விஹாரி. அவர் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக சிறப்பாக விளையாடினார். ஆனால் அடுத்த போட்டியில் நாங்கள் ஐந்து பந்து வீச்சாளர்களுடன் களம் இறங்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அதனால் அவர் விலகக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் நாங்கள் சரியாகப் பந்து வீசினோம். அதனால் எங்களால் விக்கெட்டுகளை எடுக்க முடிந்தது. ஆடுகளமும் சரியாக இருந்தது. நான் இப்போட்டியில் வித்தியாசமாக எதையும் செய்யவில்லை. நான் எனது சிறப்பான ஆட்டத்தைத் தொடர்ந்து வெளிப்படுத்த விரும்பினேன். நான் எனது திறன்களை உணர்ந்து அதை ஆட்டத்தில் செயல்படுத்தினேன்.– என்று இாந்த் சர்மா தெரிவித்தார்.

# பேச்சுக்கு கோட்டா தயார் என்றால் தாங்களும் தயார் என்கிறார் மாவை

யாழ்ப்பாணம்,நவ.25

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ இதயசுத்தியுடன் சிந்தித்துத் தமிழர் தரப்புடன் பேச விரும்பினால் தமிழ் தேசிய கூட்டமைப்பும் அவருடன் பேசத் தயாராக இருப்பதாக இலங்கை தமிழரசு கட்சியின் தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

'ஜனாதிபதி தேர்தல் முடிவின் பின்னர் அரசியல் நிலைமைகள் எவ்வாறு உள்ளன என்பது அனைவருக்கும் தெரிகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தென்னிலங்கை சிங்கள மக்களின் முழுமையான ஆதரவுடன் ஜனாதிபதியாகிவிட்டார். தமிழ்,முஸ்லிம் மக்களின் ஆதரவு இல்லாது தான் வெற்றி பெற்றார் எனவும் அவரே கூறியுள்ளார். அவ்வாறு இருக்கையில் இந்த நிலைமைகள் இனவாத அரசியல் செயற்பாடுகள் ரீதியில் இடம் பெறக்கூடாது என்பதே தொடர்ச்சியாக எமது கோரிக்கையாக உள்ளது.

அதேபோல் தான் தமிழ், முஸ்லிம் மக்களுடன் இணைந்து பயணிக்க விரும்புகின்றேன் என ஜனாதிபதி கூறியுள்ளமையை நாம் வரவேற்கிறோம். அவர் கூறியவெள உண்மையென்றால் – தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற உண்மையான நோக்கம் ஜனாதிபதிக்கு இருக்குமானால் – நாம் அவருடன் பேசத் தயாராகவே உள்ளோம்.



தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு ஒன்று வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் நாம் சஜித் பிரேமதாஸவை ஆதரித்தோம். சஜித் பிரேமதாஸவும் சிங்கள பௌத்தர் தான். அவர் இனவாதியாகவோ, பிரிவினைவாதியாகவோ செயற்படவில்லை. எனினும் அவர் தமிழ் மக்களுக்கு தீர்வு ஒன்றை வழங்குவார் என்ற நம்பிக்கையிலும் வாக்குறுதிகளுக்கு அமையவும் தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவை ஆதரித்தனர். அவ்வாறு இருக்கையில் தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவை ஆதரித்தமையைச் சாட்டாக வைத்துப் பிரிவினைவாத அல்லது இனவாத சாயம் எம்மீதோ அல்லது எமது மக்கள் மீதோ பூசவேண்டாம் என்ற விடயத்தையும் நாம் கூறுகின்றோம்.

தமிழ் மக்களும் இந்தத் தேர்தலில் தென்னிலங்கைச் சிங்கள,பௌத்தர் ஒருவரை தான் ஆதரித்தனர் என்பதை மறந்துவிடவும் வேண்டாம்.

ஆகவே இப்போது தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ன செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து ஆராய்கின்றது. இந்த வார இறுதிக்குள் இலங்கை தமிழரசு கட்சியின் அரசியல் குழு கூடும். அதேபோல் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளும் சில தினங்களுக்குள் பேச்சு நடத்தி அடுத்த கட்டமாக என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து ஆராய்வோம். அதேபோல் உண்மையான நோக்கங்களுடன் இதயசுத்தியுடன் ஜனாதிபதி அவர்கள் எம்மை பேச்சுக்கு அழைத்தால் நாமும் அவருடன் பேசித் தீர்வுகளை நோக்கிய கலந்துரையாடல் ஒன்றினை முன்னெடுக்கத் தயராக உள்ளோம்.

மேலும் இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜெயசங்கர் இலங்கை விஜயத்தை மேற்கொண்ட பின்னர் ஜனாதிபதியும் இந்திய விஜயம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளார். இந்நிலையில் தமிழ் மக்களின் விடயங்களில் சில அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. எவ்வாறு இருப்பினும் இது குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பு எந்தவித கருத்துக்களையும் பதிவிட விரும்பவில்லை. எமது உறுதியான நிலைப்பாடு அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு அப்பால் இராஜதந்திர நகர்வுகளைக் குழப்பிக்கொள்ள நாம் தாயரில்லை. – எனவும் அவர் குறிப்பிட்டார்.

## புதையல் தோண்டிய 6 பேர் வவுனியாவில் கைதாகினர்



வவுனியா, நவ. 25

வவுனியா நைனாமடுப் பகுதியில் புதையல் தோண்டிய 6 பேரை புளியங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து புதையல் தோண்டும் ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன் தினம் இரவு 11.30 மணியளவில் புளியங்குளம் நைனாமடுப் பகுதியிலுள்ள வெற்றுக்காணி ஒன்றில் 6 பேரடங்கிய குழு வினர் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் எனப் புளியங்குளம் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. அங்கு சென்ற பொலிஸ் குழு வினர் புதையல் தோண்டிய 6 பேரையும் சம்பவ இடத்தில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து மண்வெட்டி, பூஜைப் பொருள்கள், மோட்டார் சைக்கிள், ஓட்டோ என்பனவும் கைப்பற்றப் பட்டன. (ஐ – 100)

## பொதுத் தேர்தலுக்கான தந்திரோபாயம்: மஹிந்தவுடன் பேசுவாராம் மைத்திரியார்





கொழும்பு,நவ.25

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன முன்னணியின் கீழ் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் கலந்துரையாட நடவடிக்கை எடுத்துள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், இரு கட்சிகளும் பொதுக் கூட்டணியின் கீழ் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. தற்பொழுது, பொதுத் தேர்தலில் போட்டியிடும் முறைமை குறித்தும், வேட்பாளர்கள் நியமனம் தொடர்பிலும் இரு கட்சிகளும் கலந்துரையாடவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் மத்திய செயற்குழுவில் இரு கட்சிகளும் கூட்டணியில் போட்டியிடுவதற்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன், முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீ ல.சு.கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன கலந்துரையாடவுள்ளார் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்




# கரையொதுங்கிய கடல் சிங்கம்!




கொழும்பு, நவ. 25

தென்னிலங்கையில் உள்ள வெலிகம, மிதிகம பிர தேசத்தில் கடல் சிங்கம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் இந்த விலங்கு கரைக்கு அடித்து வந்ததாகப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடற்சிங்கத்தைப் பார்வையிடுவதற்கு பெருமளவு மக்கள் அவ்விடத்திற்கு வருகை தருகின்றனர். இதனை முதலில் பார்த்த மக்கள் உடனடியாகப் பொலிஸாரிடம் அறிவித்துள்ளனர்.

அந்த விலங்கின் உடலின் பல இடங்களில் காயம் ஏற்பட்டுள்ளமையினால் உடனடியாகச் சிகிச்சை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)


வடமாகாண
மரநடுகை மாதம்
கார்த்திகை 1 - 30
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல,
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

# உங்களது கனவுகளை நனவாக்கிட பயணித்திடுங்கள்

## Study in Australia | UK Canada | New Zealand




## ENTRANCE IS FREE

- Scholarships available
- Free consultation & visa guidance
- Post-study work options
- IELTS could be waived off
- Free IELTS classes
- Credit exemptions

*Conditions Apply

## HIGH VISA SUCCESS RATE

# ICBT STUDY ABROAD

077 344 2628 | 076 877 0405 | 076 643 9102

# மிலேனியம் சவால் உடன்பாடு புதிய அரசில் சாத்தியமில்லை

கொழும்பு, நவ. 25

அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிறுவனத்தின் கொடையை இலங்கையின் புதிய அரசு கோருவதற்கு வாய்ப்புகள் இல்லை என்று அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மிலேனியம் சவால் கொடைக்கு இலங்கை அரசு செல்வது சாத்தியமில்லை என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மிலேனியம் சவால் உடன்பாடு, தற்போதைய நிலையில் நாட்டின் இறையாண்மையில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, கொடைக்கான அடிப்படைகளை மாற்ற முடியாவிட்டால், மிலேனியம் சவால் கொடை உடன்பாடு பரிசீலிக்கப்பட வாய்ப்பில்லை என்றும், அதனை மாற்றிக் கொள்ள அமெரிக்கா இணங்காது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மிலேனியம் சவால் நிறுவனப் பிரதிநிதிகள் இலங்கையின் புதிய அரசை இன்னும் சந்திக்கவில்லை என்றும், சரியான நேரத்தில் புதிய அரசுடன் ஒத்துழைக்க நாங்கள் எதிர்பார்த்திருக்கிறோம் என்றும், மிலேனியம் சவால் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் ஜென்னர் எடெல்மென் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், டிசெம்பர் 9 ஆம் திகதி, இலங்கைக்கான கொடையின் எதிர்காலம் குறித்து முடிவு செய்ய மிலேனியம் சவால் பணிப்பாளர் குழு கூடும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# கோட்டா – மோடி சந்திப்பில் ‘13’ பேசுபொருளாக இராது!

## புதுடில்லி வட்டாரங்கள் தகவல்



கொழும்பு, நவ. 25

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 29ஆம் திகதி இந்தியாவுக்கு மேற்கொள்ளும் பயணத்தின்போது, 13ஆவது திருத்தச்சட்டம் குறித்து கலந்துரையாடப்படமாட்டாது என்று தகவல்கள் கூறுகின்றன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் வெள்ளிக்கிழமை புதுடில்லிக்குப் பயணமாகிறார்.

இலங்கை ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது, தமிழர் பிரச்சினை குறித்து, இந்தியப் பிரதமர் மோடி கலந்துரையாடுவார் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர் என புதுடில்லி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அத்துடன், இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் இந்திய வீட்டுத் திட்டம் மற்றும் பிற திட்டங்களைத் தொடருவது குறித்தும் கலந்துரையாடப்படும் என்றும், இது பெரும்பாலும் தமிழர்களுக்கு பயனளிக்கும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும், கடந்த அரசால் விவாதிக்கப்பட்டு வந்த 13 ஆவது திருத்தச்சட்டம் குறித்து, கோட்டாபய ராஜபக்ஷவுடனான முதல் சந்திப்பில், இந்தியப் பிரதமர் மோடி அழுத்தங்களைக் கொடுக்க வாய்ப்பில்லை என்றும் புதுடில்லி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ஐ)

# எதிர்க்கட்சித் தலைவராக நான் சஜித்தை முன்மொழியவில்லை

## சம்பந்தன் அடியோடு மறுப்பு





கொழும்பு, நவ. 25

சஜித் பிரேமதாஸவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிப்பதற்கு வழி விட்டு ஒதுங்கிக் கொள்ளுமாறு, ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரினார் என வெளியான செய்திகளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நிராகரித்துள்ளார்.

தாம் யாருக்கும் எப்போதும் அவ்வாறான அறிக்கை வெளியிடவோ, கருத்துக்களைக் கூறவோ இல்லை, இது முற்றிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் உள்விவகாரம் என்றும் அவர் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றிடம் கூறியுள்ளார்.

தேர்தலில் வடக்கு, கிழக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலும் தெளிவான தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்புக்கு அமைச்சரவையும், ஜனாதிபதியும் பதிலளிப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

தேசிய பிரச்சினைக்கான இறுதித் தீர்வை விரைவாகக் கண்டறிவதற்கு, புதிய அரசுடன் ஒன்றிணைந்து செயற்பட முடியும் என்று நம்புகிறோம்.

ஜனாதிபதி இப்போது பல அவசர விடயங்களில் ஈடுபட்டிருக்கிறார். அவர் இந்தியா செல்கிறார். நாங்கள் ஓரிரு நாட்கள் காத்திருந்து பார்ப்போம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, தேர்தல் நடந்து ஒரு வாரம் மட்டுமே ஆகிறது. மக்களின் தீர்ப்பு சிறிலங்கா அதிபருக்கும் முழு உலகிற்கும் தெரியும், என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# ஐ.தே.க. அரசினால் வழங்கப்பட்ட 7,000 நியமனங்கள் இடைநிறுத்தம்

*கொழும்பு, நவ. 25*

*ஐக்கிய தேசிய முன்னணி அரசால் அறிவிக்கப்பட்டிருந்த சலுகைக் கடன் திட்டங்கள், 7000 பேருக்கு வழங்கப்பட்டிருந்த அரச நியமனங்களை இடைநிறுத்தி வைக்குமாறு புதிய அரசு உத்தரவிட்டுள்ளது.*

*இது தொடர்பாக திறைசேரி செயலர் எஸ்.ஆர். ஆட்டிக்கல, வங்கிகள், அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் அனுப்பியுள்ளார்.*

*இடைநிறுத் தப்பட்டுள்ள திட்டங்களில், என்டர்பிரைஸ் சிறிலங்கா திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட குறைந்தது 11 சலுகைக் கடன்களும் அடங்கியுள்ளன.*

*முன்னைய அரசின் இறுதிக் காலகட்டத்தில் 7000 பேருக்கு வழங்கப்பட்ட அரச நியமனங்களையும் இடைநிறுத்தி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.*

*முகாமைத்துவ உதவியாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள், மற்றும் சிறைச்சாலைகளில் வழங்கப்பட்ட 1,300 பேருக்கான வேலை வாய்ப்புகளும் இதில் உள்ளடங்கியுள்ளன. (ஐ)*

# ஜனாதிபதி பணியாளர் குழாமின் பணிப்பாளராக ராணுவ அதிகாரி

கொழும்பு, நவ. 25ஷஷெ

ஜனாதிபதி பணியாளர் குழாமின் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) பதவிக்கு ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கே.குமரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் கே.குமரதுங்க 1971 இல் இலங்கை இராணுவத்தில் இணைந்து, 33 ஆண்டுகளுக்கு மேல் இராணுவத்தில் பணியாற்றியிருந்தார்.

கோட்டாபய பாதுகாப்புச் செயலாளராக இருந்த சமயத்தில் அவருடன் நெருக்கமாக இருந்தவர்.

ரக்னா லங்கா பி.எல்.சியின் தலைமை நிர்வாக அதிகாரியாக 2007 முதல் 2015 வரை எட்டு ஆண்டுகள் அவர் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரிட்டனின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கை மனித உரிமைகள் விவகாரம்!

லண்டன், நவ. 25

இலங்கையில் சிறுபான்மைத் தமிழ், முஸ்லிம் மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்க வலியுறுத்தி ஐ.நா. மற்றும் கொமன்வெல்த் நாடுகள் மூலம் செயற்படுவோம் என்று பிரிட்டனின் முன்னணி கட்சியும் எதிர்க்கட்சியுமான தொழிலாளர் கட்சி தமது நாடாளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 12ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் ‘இது மாற்றத்துக்கான நேரம்’– என்ற பெயரில் வெளியிட்ட விஞ்ஞாபனத்திலேயே இதனை தெரிவித்துள்ளனர்.

அதில் மேலும், இந்தியாவின் காஸ்மீர், சிரியா, ஏமன் என பல நாடுகளில் இடம்பெறும் ஜனநாயக விரோதச் செயல்கள் குறித்தும் நீதிக்கான தீர்மானங்களையும் முன்வைத்துள்ளனர். (ஐ)




# ஐ.தே.க. தலைமை பதவி; விரைவில் தீர்வு கிட்டும்

## அசோக அபேசிங்க நம்பிக்கை



கொழும்பு, நவ. 25

எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பான சர்ச்சைக்கு விரைவில் தீர்வு எட்டப்படும் என ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்க கூறுகிறார்.

சஜித் பிரேமதாஸவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்குமாறு பெரும்பான்மையான ஐ.தே.க. எம்.பிக்கள் கட்சித் தலைமையைக் கேட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

கட்சித் தலைமையில் ரணில் விக்கிரமசிங்க நீடித்தால், கட்சி இனிமேல் வெற்றி பெற முடியாதெனவும் அவர் தெரிவித்தார்.

கட்சியை உடைத்துக்கொண்டுசென்று தனிக்கட்சி தொடங்குவதல்ல எமது நோக்கம். கட்சிக்குள்ளேயே போராடி மாற்றத்தை ஏற்படுத்துவதுதான் எமது நோக்கம். ரணில் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# தொண்டமானுக்கு நேற்று மலையகத்தில் வரவேற்பு!





கொழும்பு, நவ. 25

சமுகவலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக பதவி ஏற்ற இ.தொ.கா தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கு மலையகத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அந்த வகையில் கொட்டகலை அக்கரபத்தனை ஹோல்பூருக் போன்ற பகுதிகளுக்கு மக்களைச் சந்திக்கச் சென்றபோதே அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கு இந்த வரவேற்பு வழங்கப்பட்டது. (ஐ)

# எதிர்க்கட்சித் தலைவர் பதவி ரணில் விக்கிரமசிங்கவுக்கு!



நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைமைப் பதவி முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு கிடைக்கப் பெற லாம் என நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்க்கட்சியில் அதிகமான உறுப் பினர்களைக் கொண்ட கட்சிக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்கப்படுகின் றது. இந்தவகையில், ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் அகில விராஜ் காரியவசத்தினால் சபாநாயகருக்கு வழங்கப்பட்ட எதிர்க் கட்சித் தலைவர் முன்மொழிவுக் கடிதம் குறித்து சபாநாய கர் கூடிய கவனம் செலுத்தியுள்ளார் என வும் கூறப்படுகின்றது.

இருப்பினும், ஐக்கியதேசியக்கட்சியின் செயலாளர் சபாநாயகருக்கு அனுப்பிய கடிதத்தை, கட்சியின் நிறைவேற்றுக் குழுவில் எடுத்த தீர்மானத்தின் படியோ அல்லது பெரும்பான்மை ஆதரவின் அடிப்படையிலேயோ அனுப்பவில் லையென அக்கட்சியின் சஜித் பிரேம தாஸ சார்பு மாற்றுக் குழு சர்ச்சையை எழுப்பியுள்ளது. இந்த கடிதத்தின் சட்ட ரீதியான ஏற்புடைமை குறித்தும் அக்குழு ஆராய்ந்து வருவதாகவும் குறிப்பிடப் படுகின்றது.

# அரசியலிலிருந்து விலக மலிக், மங்கள் தீர்மானம்?

முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர அரசியலில் இருந்து ஓய்வு பெற்று அடுத்தமாதம் இங்கிலாந்துக்கு குடிபெயரவுள்ளாரெனவும் அதேபோன்று மற்றுமொரு முன்னாள் அமைச்சரான மலிக் சமரவிக்கிரமவும் அரசியலில் இருந்து ஓய்வுபெற்று வர்த்தக நடவ டிக்கைளில் ஈடுபடவுள்ளார் எனவும் கொழும்புத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த தகவல்களின்படி மங்கள சமரவீரஅத்தின்அமெரிக்காபொன்றுக்கு செல்ல திட்டமிட்டுள்ளார் எனத் தெரி விக்கப்படுகிறது. எனினும் கட்சி அரசி யலில் இருந்து விலகி அனைத்து இலங்கையர்களின் நல்லிணக்கத்துக் காகவும் செயற்பட மங்கள சமரவீர தீர் மானித்துள்ளார் எனவும் The Leader என்ற ஆங்கில பத்திரிகை தெரிவித் துள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக இந்த இரு அமைச்சர்களும் அயராது பாடுபட்ட முக்கய நபர்களாவர். ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் தமது பதவிகளில் இருந்து விலகிய முதல் நபர்களும் இவர்கள்தான்.

அத்துடன் ஐக்கியதேசிய கட்சியின் நாடாளுமன்றக் குழு கூட்டங்களிலும் அவர்கள் இதுவரை பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# அரியாலை வீட்டில் ஆயுதக் கிடங்காம் தோண்டும் நடவடிக்கை நேற்று ஆரம்பம்



அரியாலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கத்துக்குப் பயன்படுத்தப்பட்டதாக பாதுகாப்புத் தரப்புகளால் தெரிவிக்கப்பட்ட வீட்டின் வளாகத்தில் ஆயுதக் கிடங்கு உள்ளமை தொடர்பில் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் அனுமதி வழங்கப்பட்ட மையை அடுத்து அகழ்வு பணிகள் நேற்று ஆரம் பிக்கப்பட்டன.

அரியாலை தபால் கட்டைச் சந்திக்கு அண்மை யாக உள்ள வீட்டில் இராணுவ முகாம் அமைந்தி ருந்தது. அந்த முகாம் வடமாகாண சபைத் தேர்தலை அடுத்து அகற்றப்பட்டது.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கத்துக்கு நடவடிக்கைகளை முன் னெடுத்தனர் என்று குறிப்பிட்டு தெய்வீகன், அப்பன் மற்றும் கோபி ஆகிய போராளிகள் 2015ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதி வவுனியாவில் படு கொலை செய்யப்பட்டனர்.

அவர்கள் மூவரும் இந்த வீட்டிலிருந்தே பயங்கர வாத நடவடிக்கைகளை முன்னெடுத்தனர் என்று குறிப்பிட்டு பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் தமது கட்டுப்பாட்டுக்குள் வீட்டை வைத்திருந்தனர். தற்போதும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரே அந்தவீட்டைத்தமதுகட்டுப்பாட்டுக்கள்வைத்துள்ளனர்.

இந்த நிலையில் சம்பந்தப்பட்ட வீட்டில் பெரியள விலான ஆயுதக் கிடங்கு உள்ளதாக இராணுவத்தி னர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். அதுதொடர்பில் நீதிமன்றின் அனுமதியைப் பெற்று அகழ்வுப் பணிகளை முன்னெடுக்குமாறு யாழ்ப்பாணம் காவல் துறையினருக்கு இராணுவத்தினர் அறிவித்திருந்த நிலையிலையே அகழ்வுப் பணிகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன.

# வவுனியா கல்வியியல் கல்லூரியில் நேற்று சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் அமை திக் கல்வி திட்ட சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கல்லூரியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

தேசிய கல்வியியல் கல்லூரியில் ஆசிரியர்களாகக் கல்விபயிலும் மாணவர்களுக்கு அமைதி கல்வித்திட்டம் தொடர்பாகப் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன.

அமைதி, மதிப்பை உணர்தல், உள்ளேயி ருக்கும் வலிமை, தன்னை உணர்தல், தெளிவு, புரிந்துகொள்ளல், தன்மானம், தேர்ந்தெடுத்தல், நம்பிக்கை மற்றும் திருப்தி போன்ற ஆற்றல்மிகு பாடத்திட்டங்கள் ஆசிரிய மாணவர்களுக்கு முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அதில் பங்கெடுத்திருந்த ஆசிரிய மாண வர்களிற்கே ஏற்று சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன..

நிகழ்வில் விருந்தினர்களாக உப பீடாதிபதிகளான திருநானந்தம் ஜெயகாண்டீபன், பொ.சத்தி யநாதன், விரிவுரையாளர் செ.இந்திராதேவி எனப் பலரும் கலந்து கொண்டனர். (100)





வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்

இல.10, மாநகர சபை புதிய கடைத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.11.2019 இல் வெளியிடப்பெற்றது.